# உதயன்

விலை ரூபா 6.00

கடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 18 சனிக்கிழமை (31-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:125




இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 27ஆவது வருடாந்த மாநாடு நேற்றுத் திருமலையில் ஆரம்ப மானது. மாநாட்டுக்கு முன்னர் எடுக்கப்பட்ட ஊர்வலக் காட்சிகள் இவை. *(படங்கள்:- 'உதயன்' திருகோண மலைச் செய்தியாளர் - சி.சசிகுமார்)*

# புரிந்துணர்வு உடன்பாடு - ஏப்ரலில்!

# நேரடிப் பேச்சுக்கள் - மே மாதத்தில்!!

## சிரேஷ்ட அமைச்சர் தகவல்

கொழும்பு,மார்ச்31

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கான நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடன் முன்வைக்கப்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்பாட்டில் இரு தரப்பினரும் ஏப்ரல் மாதத்தில் கைச்சாத்திடுவர் என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் மே மாதமளவில் நேரடிப் பேச்சுக்கள் நிச்சயமாக ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.**

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படும் விடயங்கள் குறித்துத் தற்போது இறுதித் தீர்மானத்துக்கு வந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதற்கமைய

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரிட்டனின் தடையை விலக்கக் கோரி

## புலிகள் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடத்திய நெடுமாறனும் மற்றும் 200 பேரும் கைது!

சென்னை,மார்ச்31

விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானிய அரசின் தடையை நீக்கக் கோரி நேற்று சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்திய பழ.நெடுமாறன் உட்பட இருநூறு பேர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவினால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

சென்னையில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் அண்ணாசாலை காயிதே மில்லர் பெண்கள் கல்லூரி முன்றலில் இருந்து ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி புறப்பட்டது.

பேரணி புறப்பட ஆரம்பித்த சில நிமிடங்களில் அப்பகுதிக்கு வந்த காவல்துறையினர் பேரணியை நகர விடாது தடுத்து நிறுத்தினார்கள். நெடுமாறன் உட்பட பேரணியில் கலந்துகொண்ட 200 பேரை அவர்கள் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். (உ-5)

## நோர்வே முயற்சிகள் குறித்து இந்தியா அதிருப்தியுற்றிருப்பதாகக் கூறுவது தவறு

### பாரதத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கும் மறுப்பு

லண்டன்,மார்ச்31

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியா அதிருப்தி கொண்டுள்ளது என்ற சாரப்பட இலங்கையில் வெளியான தகவல்களை பிரிட்டனிலுள்ள இந்தியத தூதரக வட்டாரங்கள் மறுத்துள்ளன.

நோர்வேயின் சமாதான முயற்சிகளை இந்தியா வரவேற்பதாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்தபோது இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் கூறியுள்ளதை இந்தியத் தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் திருச்செல்வம் நேற்றுக் கொழும்பில் விடுவிப்பு!

கொழும்பு,மார்ச்31

கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ்.பத்திரிகையாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் கொழும்புக் கோட்டை நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டார்.

சட்டமா அதிபரின் சிபாரிசின் பேரிலேயே அவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

தன்னுடன் கூடப் பழகிய - தன்னிடம் உதவிகள் பெற்ற - ஒருவர் சுயநலத்துக்காகக் கொடுத்த பொய்யான தகவலின் அடிப்படையிலேயே பொலீஸார் தன்னைக் கைதுசெய்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு முன் வன்னிக்கு உணவுப் பொருள்கள்

### கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்31

சமாதானப் பேச்சுக்கு முன்னதாக - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அரசாங்கத்தினால் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் இந்த நடவடிக்கை பேச்சு

(14ஆம் பக்கம் பார்க்க)

## சந்திவெளி கடலேரியில் இளைஞனின் சடலம்

மட்டக்களப்பு,மார்ச்31

மட்டக்களப்பு நகரில் இருந்து 21 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சந்திவெளி கடலேரியில் இளைஞன் ஒருவனின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்து அண்மையில விலகி புளொட் அமைப்பில் இணைந்து கொண்ட அகிலன் என்ற இளைஞனின சடலம் அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. (உ-3)

## கமலநாதன் மீது தாக்குதல்: அதிபர்கள் சங்கம் அதிர்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச்31

"வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் எஸ்.கமலநாதன் தாக்கப்பட்டமை பேரதிர்ச்சி தருகின்றது. இது குறித்து உச்ச நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- வடமாகாண அதிபர்கள் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

சங்கத்தின் செயலாளர் ஆ.சி. நடராசா நேற்று ஆளுநருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வா நினைவாக இன்று விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்31

தந்தை செல்வாவின் 103 ஆவது பிறந்த தினத்தையொட்டி யாழ். நகரில் இன்று விசேட நிகழ்ச்சிகள், ஆராதனைகள், வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் இன்று காலை 7.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விசேட பூஜை வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

தொடர்ந்து காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதியில் செல்வா நினைவுச் சதுக்கம் பெயர்ப்பலகையை

(14ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் 2 படையினர் காயம்

கொழும்பு,மார்ச்31

முகமாலைப் பகுதியிலுள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில இரு படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நாகர்கோயில் படைநிலைகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி நிலைமைதான் திருமலை மக்களுக்கும் வரும்!

### என்கின்றார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம்,மார்ச்31

"கல்விப் பணிப்பாளர் எஸ்.கமலநாதன் திருகோணமலையில் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்" - என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இத்தகைய சம்பவங்கள் தொடருமாயின் தீவுப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள கதிதான் திருகோணமலையில் வாழும் மக்களுக்கும் ஏற்படும் என்று அவர் எச்சரித்திருக்கின்றார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தவறிவிட்டது

கடந்த 03.03.2001 சனிக்கிழமை இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இரண்டாவது விமானத்தில் பயணத்தை மேற்கொண்ட வேளை, என்னிடம் பயண நிறைக்குக் கூடுதலாக இருந்த புத்தகத்தையும், டயறியையும் என்னுடன் பயணம் செய்த என் நண்பனும் தாயாரும் உதவும் நோக்கில் வாங்கினார்கள்.

பயண முடிவில் தவறுதலாக நான் அதைத் திருப்பிப் பெற முடியாமல் போய்விட்டது. எனவே உரிய நண்பன் தயவுசெய்து, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (86060)

பப்படத் தயாரிப்பில் வடமாகாணத்தில் மிகச்சிறந்த முறையில் சுவையாகவும், சுகாதார முறைப்படியும் கலப்படம் எதுவும் இல்லாமல் நீண்ட காலமாக நல்ல தரமான ஒரு தனி இடத்தைப் பிடித்த பப்படம்தான்

## ஆஞ்சநேயர் பப்படம்

கை தேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட இவற்றைச் சந்தைப்படுத்த எமது ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருப்பவர்கள்

## "வாலா" சோப் ஸ்தாபனத்தார்,

அச்சுவேலி. (C/15993)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

க.பொ.த. (உ/த) 2003 கணித, உயிரியல் பிரிவுகளில் ஆங்கில மொழியில் கற்க விரும்பும் எமது கல்லூரி மாணவர்கள் 02.04.2001 அன்று தொடர்பு கொள்ளவும்.

(C/15992) - அதிபர்.

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - சாவகச்சேரி

க.பொ.த. (சாதாரணதர) பரீட்சை - 2000

## மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

**(1) 10 விசேட சித்தி (D) பெற்றோர்:-**

I. கந்தசாமி ஜனார்த்தன்
II. செல்லையா ஜங்கரன்

**(2) 9 விசேட சித்தி (D) பெற்றோர்:-**

I. சிதம்பரநாதன் சபேசன்
II. யோகேந்திரராசா சிவனுஜன்
III. மகாதேவா மாதுமை
IV. நாகேந்திரன் தனுசியா
V. தங்கராசா கீர்த்தனா
VI. பரஞ்சோதி விஜிதா
VII. நாகேஸ்வரன் நிரோஜினி

**(3) 8 விசேட சித்தி (D) பெற்றோர்:-**

I. தங்கராசா கோகிலன்
II. கந்தசாமி கோமகன்
III. நவரத்தினம் செவ்வேற்குமரன்
IV. தெய்வேந்திரமூர்த்தி ஜெயரூபி

**(4) 7 விசேட சித்தி (D) பெற்றோர்:-**

I. அம்பலவாணபிள்ளை பிரதீபன்
II. பாக்கியநாதன் சசீவன்
III. கிருஸ்ணன் பிரசன்னா
IV. மகேஸ்வரன் மயூரன்
V. அருளம்பலம் குணராஜ்
VI. ஜெயரூபன் துர்க்கா
VII. செல்வநாயகம் பிரணாளினி

**(5) 6 விசேட சித்தி (D) பெற்றோர்:-**

I. பூபாலசிங்கம் கோபிகிருஸ்ணா
II. கதிர்காமநாதன் தனஞ்சயன்
III. அற்புதானந்தன் சுரேஸ்காந்த்
IV. இராசரட்ணம் லாவண்யா

*பாரிய இடப்பெயர்வின் துயரங்களின் மத்தியிலும் சிறந்த பெறுபேறுகளைப் படைத்த மேற்படி மாணவர்களையும் உயர்தர வகுப்புக்கான தகுதிபெற்ற ஏனைய மாணவர்களையும் அவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.*

*மேன்மேலும் இவர்கள் சாதனைகள் படைத்து உயர்தர வகுப்பிலும் தனிமுத்திரை பொறித்து இந்து அன்னைக்குப் பெருமை சேர்க்க ஆசீர்வதிக்கின்றோம்.*

பாடசாலை அபிவிருத்திச் சபையும்,
பழைய மாணவர் சங்கமும்.

*யா/சாவ. இந்துக்கல்லூரி,*
*சாவகச்சேரி.* (C/15991)

## பாராட்டு விழா

நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் அதிபர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற த.அழகரத்தினம், வை.சின்னத்தம்பி ஆகியோரது சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.(கஜி)

## புலமைப்பரிசில்-2001

பரீட்சை 28இல் அதிகூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரியவர்கள்:-

| | |
|---|---|
| அ.சாயினி | - 176 |
| செ.நிரோஜன் | - 173 |
| ஆ.ஜதிகானந்த் | - 171 |
| ந.திருக்கவிகன் | - 170 |
| உ.நிவேதிகா | - 169 |
| ம.அழகரசன் | - 169 |

*அடுத்த பரீட்சை– நாளை (ஞாயிறு) காலை 8.30 (ப.தே.)* (86110)

தரம் 1 முதல் O/L வரை மாதாந்த, முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## றேடியன்ற் கல்வி நிலையம்

செல்.பெனடிக் றோட், அரியாலை.

## A/L 2003

பிரிவு 2

**கலை வகுப்புகள்**

ஆரம்பம்: நாளை (01.04.2001) ஞாயிறு - 3.00 மணி

| | |
|---|---|
| TAMIL | - A.மீரா |
| LOGIC | - K.T.மோகன் |
| DRAMA | - S.சுந்தா |
| HI.CU. | - P.ஜோதீஸ்வரன் |
| CHRIS. | - A.மல்லிகா |

★ தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன.

**தரம் 5 புலமைப்பரிசில் 2001 விசேட வகுப்புகள்**

☞ ஆரம்பம்: 01.04.2001 ஞாயிறு 9 மணி
★ ஒவ்வொரு ஞாயிறும் காலை 10 மணிக்கு BOND புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும். (C/15997)


## லஷ்சுமி இணுவில்

கடைசி வாரமாக
விஜயகாந்த், மந்த்ரா, செந்தில் நடிப்பில்

## சிம்மாசனம்

(ரீலஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (ப.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந்த், மீனா, பிரபுதேவா நடிப்பில் (C/15741)

## வானத்தைப்போல

காட்சிகள்: 10.30, 2.30 (ப.நே.)

## நாகம்மஸ் சுன்னாகம்

அஜித், கார்த்திக், மீனா நடித்த

## ஆனந்தப் பூங்காற்றே

(ரீலஸ்) தினசரி 11.00, 2.30 (ப.நே.) (86091)


**SALE! SALE!!**

இதோ! ... முந்துங்கள்

உள்ளம் துள்ளும் புதுவருடப் பரிசு!

## நாங்கள் ரெடி! நீங்கள் ரெடியா?

ஆம்

**மகாநதி** வழங்கும்

**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**

இத்தள்ளுபடி 15.04.01 வரை மட்டுமே!!
நதிகளின் சங்கமம் கடலில்!
சகலவித புடைவைகளின் சங்கமம் மகாநதியில்
புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்

**புதுவருடப் புடைவைகளுக்கு**

## மகாநதி புடைவை அகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான நிறுவனம்)
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்குப் பிரத்தியேகக் காட்சி அறை
16 நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம். (C/15995)

## பெறுபேறுகளைப் பார்வையிடலாம்

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி G.A.Q 1999/2000 பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிடலாம்.

*சுட்டெண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.*

**மிலேனியம் ஓடியோ வீடியோசென்ரர்,**
82/6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (86089)

## மாபெரும் இசை நிகழ்ச்சி

இடம் :- மகாத்மா திரையரங்கு - நெல்லியடி
நாள் :- 7-4-2001 சனிக்கிழமை
நேரம் :- பிற்பகல் ஒரு மணி

1. லவ்லி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி
2. மணிக்குரல் V.S.சற்குணன் (யாழ்.) தலைமையில்

**பாட்டுக்குப் பாட்டு**

3. அகில இலங்கைப்புகழ் K.S.பாஸ்கரன் குழுவினரின்

**இசை நடனவிருந்து(பிறேக் டான்ஸ்)**

முக்கிய குறிப்பு:- பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும்(இருபாலாரும்) கலைஞர்கள் அனைவரும் 3-4-2001 ஆம் திகதிக்கு முன்னர் லவ்லி றெக்கோடிங் சென்ரரில் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

*நெல்லியடி.* (86022) - லவ்லி இசைக்குழுவினர்.

## 45ஆம் நாள் நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 - 10 - 1958 | 15 - 02 - 2001 |

## அமரர் சண்முகம் யோகநாதன்

*கைப்பிடித்த லதாவையும், லதனையும், லக்சினையும், கண்ணீரில் தவிக்க விட்டுப் பறந்ததென்ன விண்ணுலகம்?*
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*42/6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.* (86093)

மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## உதயன்

### மனதில் ஊன்றி இருத்துக!

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துதல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்பன உட்பட நாட்டு நலன்—மக்கள் நலன்—கருதும் பதினொரு விடயங்களில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இணக்கத்துக்கு வந்திருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஒரு சந்திப்பில், மேற்சொன்ன வகையான முக்கிய விடயங்கள் குறித்துக் கருத்து இணக்கம் காணப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் அவற்றுக்கு இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிப்படை உரிமைகள், மொழி உரிமைகளைப் பேணுதல், அவசரகால அதிகாரங்களைமட்டுப்படுத்துதல், ஊடகத்துறைச் சுதந்திரம், நீதிமன்றச் சுதந்திரம் என்பனவற்றை நிலைநாட்டுதல், நாடாளுமன்றத்துக்கு உரிய கௌரவத்தை வழங்குதல் என்பனவும் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடங்குகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கடந்த ஏழு வருட ஆட்சியில் மேற்கண்ட பலவும் வழமைக்கு மாறாகவோ அல்லது மேலதிக அதிகாரத்தனத்துடனோ கையாளப்பட்டு வருவது ஒன்றும் புதியதல்ல. உதாரணமாக அவசரகால அதிகாரங்களை பொ. ஐ. மு. அரசு மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பறித்தும் நசுக்கியும் அவர்களை அடக்கி ஒடுக்கியும் மேலோங்கித்தனமாக நின்று அதீதமாகப் பயன்படுத்துவதைக்காணலாம்.

அரசாங்கத்தினதும் அதன் அடிவருடிகளினதும் மேன்மைக்கும் சுயநலன்களுக்கும், குந்தகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் இலக்குகளை வைத்துக் கொண்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் கூடப்பறிக்கப்படுகின்றன; மக்களின் அடிப்படை உரிமைகளே மீறப்படுகின்றன.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இத்தகைய நிலை மீண்டும் தோன்றாதிருக்க — உருவாக்கப்படாதிருக்க — ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பின் முயற்சி பயனளிக்குமானால் மெத்தவும் நல்லது.

ஜனநாயகக்கூட்டமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையினராக இருப்போர், ஆள்பவர்களாகவும் ஏனையோர் ஆளப்படுவோராகவும் அடிமைகளாகவும் சம அந்தஸ்தோ, சமமான உரிமைகளோ இல்லாதிருப்போராகவும், வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும் நிலைமையை அடியோடு மாற்ற வேண்டும்.

ஜனநாயக மரபுகள் அல்லது பண்புகள் என்ற போர்வைக்குள் எண்ணிக்கையில் குறைவான சிறுபான்மை மக்களின் பிறப்புரிமைகளை பறிக்கவும், அழிக்கவும், மழுங்கடிக்கவும் வகை செய்யக் கூடாது; அனுமதிக்கக் கூடாது.

ஜனநாயகம் என்பது வலியோருக்கு வாய்ப்பானதாகவும், நலிந்தோருக்கு நயமற்றதாகவும் இருக்காமல் பார்த்துக் கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

இந்த நாடு பல்லின, பல்மொழி, பல்மத, பல்கலாசாரத் தன்மை கொண்டது என்ற அடிப்படையில் இனசமத்துவம், மொழித் தனித்துவம், மத சுதந்திரம், கலாசாரப் பெருமை என்பனவற்றைப் பேணவும் உறுதி செய்யவும் வகை செய்யும் ஆட்சிக் கட்டமைப்பு தேவை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மாற்றங்களை விளைவோர் இதனையும் மனதில் ஊன்றி இருத்துவாராக.

# சைவ சமய விவகாரக் குழுவை கலைக்க மாநகர சபை தீர்மானம்

## புதிய குழு நல்லைக் குமரன் நூலை வெளியிடும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். மாநகர சபையில் சைவ சமய விவகாரக் குழு கலைக்கப்பட்டு புதிய யாப்பு தயாரிக்கப்பட்டு புதிய குழு தெரிவு செய்யப்படவேண்டும் என்று யாழ். மாநகர சபையில் மாதாந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேயர் என். ரவிராஜ் தலைமையில் நேற்று முன்தினம் யாழ் மாநகர சபையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ புதிய சைவ சமய விவகாரக் குழுவினால் ஆகஸ்ட்டில் நல்லைக் குமாரன் நூல் வெளியிடப்படும்.

★ யாழ்; மாநகர சபையினால் பொது மக்களின் நன்மை கருதி 24 மணி நேர அம்புலன்ஸ் சேவையை மாநகர எல்லைக்குள் நடத்துதல்.

★ நகரப் பகுதியிலுள்ள மினிபஸ் தரிப்பு நிலையத்தை வேறு இடத்துக்கு இடம் மாற்றல். இது தொடர்பாக மினி பஸ் சங்கம் மற்றும் வர்த்தகர் சங்கம் போன்றவற்றுடன் கலந்துரையாடல்களை நடத்துதல்.

★ கசிப்பு பாவனையைத் தடைசெய்யும் நடவடிக்கையில் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

★ யாழ். மாநகர சபையின் சித்த வைத்தியப்பிரிவை விஸ்தரித்து மூலிகை உற்பத்தியைப் பெருக்குதல் வேண்டும்.

★ யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிகளாக டாக்டர் மரியதாஸ், டாக்டர் கந்தையா சபாரட்ணம் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் டாக்டர் மரியதாஸ் சபையின் சிகிச்சை நிலையங்களுக்கும் டாக்டர் சபாரட்ணம் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு பொறுப்பாக இருப்பார்கள்.

★ யாழ். நகரிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளைச் சபை மேற்கொள்ளவேண்டும்.

இது தொடர்பாக யாழ். முஸ்லிம் அமைப்புகளுடன் சபை தொடர்பு கொள்ள வேண்டும்.

★ பொதுசன நூலக ஆலோசனைக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட வேண்டும். இதில் மாநகர சபை மேயர், உறுப்பினர்கள், ஆணையாளர் மற்றும் த. வி. கூட்டணி, புளொட், ஈ. பி. டி. பி, ஈ பி. ஆர். எல். எவ் பிரதிநிதிகளை உள்ளடக்குதல் வேண்டும்.

★ மாநகரசபை சட்டதிட்டங்களை மீறிச் செயற்படும் நடைபாதை வியாபாரம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (க-5-ரி)

## காணாமற் போனோர் 150பேரின் விசாரணை இதுவரை பூர்த்தி

### ஐவரின் உறவினருக்கு மீண்டும் அழைப்பு

யாழ்ப்பாணம், மர்ச் 31

குடாநாட்டில் காணாமற் போன 150 பேர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாகக் கொழும்பில் இருந்து வந்துள்ள புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

காணாமற் போன 155 பேரின் விசாரணைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டு வந்த இவர்கள் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:

குடாநாட்டில் காணாமற் போனவர்களில் 150 பேரின் உறவினர்களையும் நேரடியாக விசாரணை செய்து விட்டோம். இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக விசாரணைக் கோவைகளைக் கொழும்புக்குத் தொகுதி தொகுதியாக விமானம் மூலம் அனுப்பிக்கொண்டிருக்கின்றோம்.

இன்னும் 5 பேரின் விசாரணைகளே நடைபெறாமல் எஞ்சியுள்ளன. அந்த 5பேரின் உறவினர்களின் பெயர், விவரங்கள் தெரியவில்லை. இதனால் அவர்களைத் தொடர்பு கொள்ள முடியாமல் இருக்கிறது.

காணாமற் போனதாகக் கூறப்படும் அந்த 5 பேரின் பெயர் விவரங்களும் வருமாறு:

★ சரவணமுத்து சிறீதரன் (பழையவாய்க்கால் வீதி, மிருசுவில்)

★ வல்லிபுரம் பாஸ்கரன் (மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரி)

★ அகிலேஸ்வரன் அமல்ராஜ் (அக்கராயன் குளம், கிளிநொச்சி)

★ அல்போன்சு அன்ரன் (மத்திய கிழக்கு வீதி, குருநகர்)

★ ஐயன்பிள்ளை நிருஜன் (கைதடி வீதி, நுணாவில்)

இந்த 5 பேரினதும் உறவினர்கள் அல்லது இவர்கள் காணாமற் போனமை தொடர்பாக முறைப்பாடு செய்தவர்கள், தகவல் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் உடனடியாக யாழ். பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு—

புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்புத் தந்து அவர்கள் விடயத்தில் உண்மை நிலையை வெளிக்கொணர உதவுமாறு புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை —

குடாநாட்டில் காணாமற் போனவர்கள் தொடர்பான இரண்டாம்கட்ட விசாரணைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டது. (க-6)

## யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### தஞ்சம் கேட்போரைக் காத்திடுவீர்!

வண்ணைப் பதிதனிலே,
வாலாம்பிகை அம்மையோடு,
வைத்தீஸ்வரனார் கோலாகலமாய்.
நாம்—

நெஞ்சம் உருகி நின்று,
கெஞ்சியே நிற்கிறோம்; சிவனே,
தஞ்சம் கேட்போரைக் காத்திடுவீர்!

எம்மைப் போல
இல்லங்கள் விட்டு வந்து
இன்னருள் கேட்டு நிற்போர்க்கு
நீலமிடற்றோனே அருளிட வேண்டுமையா!

- மீசாலையூர்க் கமலா.

(இன்று 13 ஆம் திருவிழா)

## ஆசிரியருக்கு

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்திட்ட வேலைச் செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்திற்கு கணிதம். இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வலய அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

ஆசிரிய சேவையில் தரம் 2. 1 ஐச் சேர்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரி ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## இன்று 250 ஆவதுபொதுக் கூட்டம்

# பல்கலைக்கழகப் பேரவையால் ஏழு பேருக்குக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் 250 ஆவது பொதுக் கூட்டம் இன்று பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெறவுள்ள நிகழ்வில் பேரவையின் நூறு கூட்டங்களுக்கு மேல் கலந்து கொண்டவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிக்கப்படவுள்ள ஏழு பேரவை உறுப்பினர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ அதி கூடுதலான கூட்டங்களில் கலந்து கொண்ட பட்டயக் கணக்காளர் அ. சோமசுந்தரம்பிள்ளை

★ பரமேஸ்வரக் கல்லூரியின்முன்னாள் அதிபர் எஸ். சிவபாதசுந்தரம். (இவர்கள் இருவரும் மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டவர்கள் ஆவர்.)

★ மறைந்த முன்னாள் பேராசிரியரும் துணைவேந்தருமான சு. வித்தியானந்தன்.

★ முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரட்ணம்.

★ பேராசிரியர் ப. தர்மரட்ணம்.

★ முன்னாள் வவுனியா வளாகத் தலைவர் ந. பாலகிருஷ்ணன்.

★ யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

இவர்களைக் கௌரவித்து பாராட்டுச் சின்னங்கள் வழங்கப்படும். (க-6-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

பளைப் பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும்.

நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் வடக்கு — கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளருமான து. வைத்திலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. பெ. வேலாயுதபிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர். (க-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நடத்திவரும் கலைவார நிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி இடம் பெறவுள்ளது.

முற்பகல் 9-00 மணிக்கு ஆரம்பமாகும் கரம் போட்டியில் 'ஏ' அணியை எதிர்த்து 'டி' அணியும் 'பி' அணியை எதிர்த்து 'சி' அணியும் விளையாடவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மேசைப் பந்துப் போட்டியில் 'ஏ' அணியை எதிர்த்து 'டி' அணியும் 'பி' அணியை எதிர்த்து'சி' அணியும் மோதவுள்ளன. (உ—6)

## வானியல் பாசறை

யாழ்ப்பாணம், மார்ச் 31

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய கணித, விஞ்ஞான மன்றமும், யாழ். கல்வி வலய விஞ்ஞான வள நிலையமும் இணைந்து நடத்தும் வானியல் பாசறை நிகழ்வு இன்று சனிக்கிழமை இரவு பாடசாலை வளாகத்தில் நடைபெறும்.

மாணவர்கள் இரவு வானில் உடுத் தொகுதிகளை அவதானித்து ஒப்படை வேலைகளில் ஈடுபடுவர். வானியல் சம்பந்தமான வீடியோப் படக்காட்சி ஒன்றும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. (க)

### உதயவாக்கு

அமைதியாய் இரு; நீ எவரையும் வசப்படுத்திக் கொள்ள முடியும்.

### நாளை

பங்குனி 19
ஞாயிற்றுக்கிழமை
திதி: அட்டமி
பின் இரவு: 12.52 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல் 5.32 வரை.
சுபநேரம்: 09.11—10 41
ராகுகாலம்: 04 41—06.11
(பழைய நேரப்படி)

# பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்

யாழ்ப்பாணம்

## கூறுவிலை கோரல்

### தார் ஏற்றிக்கொண்டு வருதல்

கொழும்பு லங்கம் (PVT) லிமிட்டெட் இல் கொள்வனவு செய்யப்பட்ட 1,000 பரல் தாரை, லங்கம் கொழும்பு களஞ்சியத்திலிருந்து கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டு வந்து கப்பலில் ஏற்றி 30.04.2001 ஆம் திகதிக்கு முன் பருத்தித்துறை இறங்குதுறைக்குக் கொண்டு வருவதற்குத் தகுதியுடைய பொருள்கள் ஏற்றுபவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**பொருள்கள்:** ஒரு பரல் தார் கொழும்பில் இருந்து பருத்தித்துறை இறங்குதுறைக்குக் கொண்டுவரும் செலவு, கப்பல் கூலி உட்பட.

200 லீற்றர் தார் பரல் ......................

170 லீற்றர் தார் பரல் ......................

தங்கள் கூறுவிலைப் படிவங்களை 'பி / உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், இல. 29, செட்டித் தெரு நல்லூர், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு 16.04.2001 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் அரக்கு முத்திரையிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(சி. சிவராஜலிங்கம்)
பி. உ. உ. ஆணையாளருக்காக,
யாழ்ப்பாணம்.

(சி/15988)

---

## அத்திவாரக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 31

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் ஆலயத்தில் முருகப்பெருமான் ஆலயத்துக்கான அத்திவாரக்கல் நடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 – 55 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் கலந்து கொள்வார்.

(க-10)

## நல்லை ஆதீன குருமுதல்வர் குருபூஜை விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 20 ஆவது ஆண்டு குருபூசை ஆராதனை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு யாக பூசையுடன் நிகழ்வு ஆரம்பமாகி 11 மணிக்குச் சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் 12.30 மணிக்கு மாகேசுவர பூஜை நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கும் 3 மணிக்கு கந்தபுராண படனமும் இடம் பெறும். (க-10)

---

# கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக உறுப்பினர் இடாப்பு மூடப்பட்டு கிளைவாரியாகத் தயாரிக்கப்பட்ட முழுத் தகைமைபெற்ற உறுப்பினர் அட்டவணைகள், எமது சங்கம் தற்போது இயங்கி வரும் **முடக்காடு வீதி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி** (பஞ்சாட்சரமில்) என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த அட்டவணைகள் தொடர்பாக மேன்முறையீடுகள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் உறுப்பினர்கள் அவற்றை இன்றிலிருந்து (07) ஏழு நாள்களுக்கிடையில் மேற்படி முகவரியில் இயங்கும் சங்கத் தலைமை அலுவலகத்தில் எழுத்து மூலம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவுச் சட்டத்தின்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளித்து வாக்களிக்கும் உரிமையைப் பெற்றவர்களாவர். முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்களென்பது உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்தவரும் ஒரு பங்கின் முழுப்பெறுமதியான 100/- ரூபாவைச் செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதி, இடம் மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக பின்னர் விளம்பரப்படுத்தப்படும்.

பொ. சுப்பிரமணியம்
செயலாளர்
கொடிகாமம் ப. தெ. வ. அ.
கூ. சங்கம்.

சங்கத் தலைமை அலுவலகம்,
முடக்காடு வீதி,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

(86078)

---

# நான்காம் வருட குருபூசைத் தினம்

01 - 04 - 2001 ஞாயிற்றுக்கிழமை



தவத்திரு.

## வே. முருகேசுசுவாமி அவர்கள்

சிறப்புரை:- திரு சி. முருகேசம்பிள்ளை J. P.
(ஓய்வுபெற்ற பிரதேச செயலர்)
ஞானபண்டித சேவா சுரபி
Dr சி. கதிரவேற்பிள்ளை

சொற்பொழிவு:- "நீறுதந்தமுருகேசன்"
வழங்குபவர்:- பண்டிதர் சி. வேலாயுதம்

இசைச் சொற்பொழிவு:- 'குருவாய் வருவாய்'
வழங்குபவர்:- கவிமணி க. ஆனந்தராசா
(அன்னைதாசன்)
பக்கவாத்திய சகிதம்

மேற்படி குருபூசைத்தின நிகழ்வுகள் காலை 8-00 மணியளவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் அறுபத்துமூவர் குருபூசையும் இடம்பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அன்றையதினம் நடைபெறவுள்ள சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தவத்திரு வே. முருகேசுசுவாமி
அவர்களது அடியார்கள் சார்பில்
ஆ. அருணாசலம்

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச் சந்நிதி.

(சி-15972)

---

# நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்.

முதலாம் ஆண்டு — இரண்டாம் ஆண்டு





| அமரர் | | திருமதி |
|---|---|---|
| **நாகமுத்து இளையப்பா** | | **இளையப்பா அன்னப்பிள்ளை** |
| (இளைப்பாறிய ஆசிரியர்) | | (இளைப்பாறிய ஆசிரியை) |
| 01–03–1915 | < பிறப்பு > | 16–07–1917 |
| 10–04–2000 | < இறப்பு > | 16–11–1999 |

திதி:- 31 -- 03 -- 2001

தந்தையே:-

வையகம் தன்னில் வந்த, மாண்புறுதெய்வமாகி
பொய்வழி தவிர்த்து மேலாம் போதங்கள் எய்தவைத்து
உய்வழி அனைத்தும் காட்டி உலகத்தே உயர வைத்த
தெய்வமே; உங்கள் பாசம் சித்தத்தில் இனிதே தேக்கி
நெக்கு நெக்குருக நெஞ்சம் நீர் விழி நிறைந்து மல்க
பக்கலில் சேர ஒண்ணாப் பாவியராகி நின்று
திக்கினை மட்டும் நோக்கி அகம் நெகிழ்ந்து-அஞ்சலிக்கின்றோம்!

தாயே:-

சீரிய வாழ்வில் வந்து சிறப்பெலாம் அள்ளித் தந்து
நேரிய வழியைக் காட்டி நிகரிலா அன்பை ஊட்டி
கூரிய மதியால் நீண்ட கொள்கையால் எம்மையாண்ட
பாரிய பண்பின் ஊற்று பரிவுடன் எம்மைக் காத்து
ஓங்கிய புகழினோடும் உயரிய சிறப்பினோடும்
தேங்கிய செல்வத்தோடும் சீரிய கல்வியோடும்
நாங்களின்குயருமாறு நாளெல்லாம் அன்பு தந்த
தாயே; அகம் நெகிழ்ந்து - அஞ்சலிக்கின்றோம்!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
கைதடி நாவற்குழி,
கைதடி.

தற்காலிக முகவரி:
நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம்,
(K. R. R. தொலைத் தொடர்பகம் அருகில்)

(86090)

# புலிச் சந்தேகநபர்களை விடுதலை செய்து சமாதான நல்லெண்ணத்தைக் காட்டலாம்

## கொழும்பில் நடந்த சமாதான அழைப்புக் கூட்டத்தில் வலியுறுத்து

கொழும்பு,மார்ச்31

தென்பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலிச் சந்தேகநபர்களையும், புலிகளின் காவலில் இருக்கும் எம்மவர்களையும் பரஸ்பர புரிந்துணர்வுடன் விடுதலை செய்து சமாதானத்திற்கான நல்லெண்ண வெளிப்பாட்டை இரு தரப்பும் காட்ட வேண்டும் என்று சமாதானத்திற்கான பெற்றோர் அமைப்பின் தலைவர் கப்டன் ஜானக தேனுவர வேண்டுகோள விடுத்துள்ளார்.

கொழும்பு, கோட்டை ரயில நிலையத்திற்கு முன்பாக கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாலுமிகள் உறவினர்கள் சங்கத்தின் சமாதானத்திற்கான அழைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே கப்டன் தேனுவர இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்-

புதுவருடத்திற்கு முன்னர் புலிகள் தமது நல்லெண்ண வெளிப்பாட்டைக் காட்டுவதற்குத் தயாராக இருப்பது தெரியவருகிறது. அவர்கள் எமது மாலுமிகள் உட்பட பாதுகாப்புப் படையினர், சிவிலியன்களை விடுவிக்கத் தயாராக இருக்கின்றனர். அரசு இவ்விடயத்தில் காட்டும் அக்கறையையும், பதிலையும் பொறுத்தே நம்மவர்களின் விடுதலை தொடர்பான முடிவைத் தீர்மானிக்க முடியும்.

### யுத்தத்திற்கு 75வீத மக்கள் எதிர்ப்பு

யுத்தம் சகல இனத்தவர்களுக்கும் நாளுக்கு நாள் அழிவுகளையே ஏற்படுத்தி வருகிறது. துப்பாக்கிரவைக்கோ, குண்டுக்கோ தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அல்லது புலிகள், இராணுவம் என்ற பாகுபாடு இல்லை. இதனால், இந்த யுத்தத்தை 75 வீதமான மக்கள் நேரடியாகவே எதிர்க்கின்றனர். சிலரே யுத்தம் மூலம் வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்களும் எதிர்காலத்தில் இதன் பலாபலனை உணர்வார்கள்.

நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம். தமிழ் இளைஞர்களும் அதனையே விரும்புகிறார்கள் சித்திரைப் புதுவருடத்தின் போது மனிதாபிமான அடிப்படையில் எமது கப்பலின் மாலுமிகளையும் ஏனையவர்களையும் விடுதலை செய்யவேண்டுமென்று புலிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

எம்.வி.மிஷன் கப்பலின் ஐந்து மாலுமிகள், ஐரிஷ் மோனா கப்பலின் இரண்டு மாலுமிகள், பிரின்ஸஸ் காஷ் கப்பலின் நான்கு மாலுமிகள் என மொத்தம் 16 மாலுமிகள் புலிகளின் காவலில் உள்ளனர்.

### விடுவிக்கவேண்டும்

திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்கள் சிலரின் பிரிவால் அவர்களது குடும்பத்தவர்கள் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர். அதனால் அந்த மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். அதேபோல் தடுத்து வைத்துள்ள படையினரையும் விடுவிக்க வேண்டுமென புலிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

புலிச் சந்தேகநபர்களை விடுதலை செய்து புலிகள் வசமுள்ள சிங்களவர்களை விடுவிக்கவேண்டும். சில காலமே வாழ பிறப்பெடுத்துள்ள நாம் இறக்கும் வரை சமாதானத்துடன் வாழவேண்டும். இந்த யுத்தம் சிங்களவருக்கும், தமிழருக்கும் பெரும வேதனையைத்தான் தருகிறது.

### நானும் புலிகளால் விடுவிக்கப்பட்டவன்

நல்லெண்ணத்தைத் தெரிவித்து வரும் புலிகள் பல தடவைகள் பலரை விடுவித்துள்ளனர். நானும் அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவன்தான். ஆனால் இதற்குச் சாதகமாக அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இனியாவது இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, புலிகளின் தடுப்புக் காவலிலுள்ள மாலுமிகளின் விடுதலை குறித்து அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தி அவர்களை விடுவிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கோரிக்கை விடுத்ததுடன் தங்கள் உள்ளக் குமுறல்களையும் பதாகைகளில் எழுதி வெளிப்படுத்தினர் "புலிகளே, எமது பிள்ளைகள் எம்முடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாட அவர்களை விடுதலை செய்யுங்கள்"

"அரசாங்கமே, எமது பிள்ளைகளைப் பலியிடாதே", "அப்பா நீங்கள் வரும்வரை நாங்கள் கண்ணீருடன் காத்திருப்போம்","புலி மாமாவே அப்பாவைக் கேட்டு தங்கச்சி அழுகிறாள்", "எங்கள் வேதனைகள் அரசியல்வாதிகளுக்கு வேடிக்கையாக இருக்கிறது" என்ற வாசகங்கள் அந்தப் பதாகைகளில் காணப்பட்டன.

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன விருதைப் பெறும் முதலாவது தமிழர்

## பருத்தித்துறை வீரர்களின் ஆசான்

உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு ஏணிப்படியாக வாழ்ந்த முன்னாள் உதைபந்தாட்ட வீரர்களையும், நிர்வாகிகளையும் வருடா வருடம் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் கௌரவித்து வருகிறது.

அந்த வகையில் இன்று நீர்கொழும்பு ஓஷியானிக் உல்லாச விடுதியில் நடைபெறவுள்ள இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழக முன்னாள் வீரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் கௌரவிக்கப்படவுள்ளார்.

இரத்தினசிங்கம் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை உதைபந்தாட்டத்துடனேயே கழித்துள்ளார்.

ஆரம்பத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரராகக் காலடி பதித்த இவர், முன்னிலை மத்தியஸ்தராகவும் தொடர்ந்து உதைபந்தாட்ட மத்தியஸ்தராகவும் கடமையாற்றினார்.

### நீர்கொழும்பில் இன்று கௌரவிப்பு நிகழ்ச்சி

இவரது வழிகாட்டலில் உதயமான வதிரி டயமண்ட் விளையாட்டுக கழகம் எண்ணற்ற வீரர்களை உருவாக்கியுள்ளது; உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

சிறந்த பயிற்றுவிப்பாளரான இரத்தினசிங்கம் உதைபந்தாட்டத்தின் நுணுக்கங்களைக் கண்டறிந்து வளர்ந்துவரும் உதைபந்தாட்ட வீரர்களின் வளர்ச்சிக்கு ஏணிப்படிகளாக வாழ்ந்தவர்.

தனது ஆரம்பக் கல்வியை பதுளை தர்மராஜாக் கல்லூரியில் ஆரம்பித்த இவர் பின்னர் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வியைத் தொடர்ந்தார்.

1948ஆம் ஆண்டு உதைபந்தாட்டத்தில் ஆர்வம்கொண்டு மைதானத்திற்குக் கால் பதித்த இவர், அன்று தொடக்கம் இன்று வரை உதைபந்தாட்டத்தில் பேரபிமானம் கொண்டவராகவே வாழ்ந்து வருகின்றார்.

தனது மேற்படிப்பைத் தொடர்வதற்காக 1958ஆம் ஆண்டு இந்தியா சென்ற இவர், உடற்கல்விப் 



போதனாசிரியர் டிப்ளோமாப் பட்டம் பெற்று ஆசிரியரானார்.

மீண்டும் தாயகம் திரும்பிய இவா பதுளை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஆசிரியராகச் சேவையாற்றிய காலங்களில் இந்த மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட அணியில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார்.

1962ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய இரத்தினசிங்கம் 1972ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட அணியிலும் சிறப்பாக விளையாடினார்.

உதைபந்தாட்டத்தை பொறுத்த வரையில் மைதானத்தின் எந்தப் பகுதியிலும் சிறப்பாக விளையாடக் கூடிய தனித்திறமை பெற்ற இவர், 1965ஆம் ஆண்டில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணிக்குத் தலைமை வகித்தார்.

இரத்தினசிங்கம் ஆசிரிய பணியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நீண்ட காலமாக சேவையாற்றி அந்தப் பாடசாலையில் இருந்தே ஓய்வும் பெற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட வீரர்களின் ஆசானாக, சிறந்த பயிற்றுவிப்பாளராகச் சேவையாற்றிய இவர் தனது சொந்தக் கழகமான வதிரி டயமண்ட் கழகத்திலும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் வளர்ச்சியிலும் ஒரு கட்டளைக் கல்லாக வாழ்ந்தார்.

கடமை உணர்வும், கட்டுப்பாடும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் மூலம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் விருதைப் பெற சிபார்சு செய்யப்பட்டார்.

தங்களின் வாழ்நாளில் பெரும் பகுதியை உதைபந்தாட்டத்துக்காக அர்ப்பணித்தவர்களின் பெயர்களை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் இணைந்துள்ள லீக்குகள் சிபார்சு செய்துள்ளன.

இவ்வருடம் சிபார்சு செய்யப்பட்ட வீரர்களில் 7 பேரே விருதுகளைப் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் கௌரவ விருதைப் பெறும் முதலாவது தமிழரான தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கத்தின் சேவை மேலும் வளர வாழ்த்திப் பாராட்டுவதில் நியாயமுள்ளது.

### தந்தையின் வழியில்

தனது உதைபந்தாட்டப் பிரவேசம் பற்றி இவரிடம் கேட்டபோது:-

உதைபந்தாட்டத்தில் பெரும் வெற்றியை ஏற்படுத்தியவர் எனது தந்தையான தம்பிப்பிள்ளைதான். உதைபந்தாட்டத்தில் அவருக்கு அத்துறையில் இருந்த தீராத மோகமே என்னையும் அவரது பாதையில் காலடி பதிக்க வைத்தது.

பதுளை உதைபந்தாட்டக் கழகத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரனாக இருந்த எனது தந்தை தனது கழகம் ஒரு போட்டியில் தோல்வி அடைந்ததைத் தாங்க முடியாது அந்த அதிர்ச்சியால் அதே மைதானத்தில் மயக்கமடைந்து உயிர் துறந்தார்.

இடையில் விட்டுச் சென்ற அவரது பணியைத்தான் நான் தொடர்ந்தேன் என்று கூறினார்.

- வதனன்.

# பனையால் விழுந்தவனை....

'பாடசாலை செல்லவேண்டாம் என்று ஆசிரியர்கள் கூறலாமா?' என்ற தலைப்பில் 'உதயன்'-'வாசகர் திருமுகம்' பகுதியில் வெளிவந்த ஒரு கடிதம் பலரையும் சிந்திக்க வைத்தது. 'இளைப்பாறிய ஆசிரியர்' எனத் தம்மை எழுதியவர் மறைத்துக் கொண்டாலும் அதுகூடத் துணிச்சல்மிக்கதே என்பேன்.

அவர் மேலும் அக்கடிதத்திலே 'மாணவர்களைப் பாடசாலைக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறும் ஆசிரிய சமூகத்தை இங்கு தான் பார்க்கிறோம்' என்றும் 'இடர்காலப்படி உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை என்பதற்காக பாடசாலைகளைப் பகிஷ்கரித்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் கொண்டதுதான் இந்த ஆசிரிய சமூகம்' என்றும் 'எழுச்சி மாநாட்டை ஒரு சனிக்கிழமையோ அன்றி ஞாயிற்றுக்கிழமையோ வைத்திருந்தால் கற்பித்தலும் கற்றலும் பாதிக்கப்பட்டிருக்கமாட்டா' என்றும் சரியாகவும் பொருத்தமாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் சொல்லத் தவறியதாக இதே ஆசிரிய சமூகம் இதற்கு முன்னரும் அது போன்று நடந்து கொண்டதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். அவ்வப்போது இவர்கள் மாணவர்களையோ அவர்களது நலன்களையோ சிறிதும் பொருட்படுத்தாது மேலதிகப் படிகளுக்காக 'சுகவீன லீவு'ப் போராட்டங்கள் நடத்திவந்தது நாமறிந்த சங்கதிகள் தானே...!

இந்த இடத்திலே மாணவர்களின் கல்வியிலும் அவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு பணியாற்றிய அக்கால ஆசிரியர்களை நினைக்கத்தோன்றுகிறது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நான் படித்த அக்காலத்தில் அககலலூரி ஆசிரியர்களான பாலரட்ணம் மாஸ்ரர், செல்வரத்தினம ரீச்சர் போன்றோர் பாடத்திட்டங்களைச் செய்வதற்காகவும் மேலதிகப் போதனைக்காகவும் விசேட மாலை வகுப்புகளும் சனிக்கிழமை வகுப்புகளும் நடத்தியது நினைவுக்கு வருகிறது. அப்பொழுது அவர்களும் அவர்களைப் போன்ற பல ஆசிரியர்களும் எம்மிடமிருந்து எந்தவித ஊதியத்தையும் எதிர்பார்க்காது சேவையாகவே இதனைச் செய்தார்கள். இதேபோன்று குடாநாட்டின் (அனேகமாக) எல்லாப்பாடங்களிலும் ஆசிரியர்கள் தமது மாணவர் கல்வியில் அதீத அக்கறை காட்டினர். இப்பொழுதும் தனிப்பட்ட முறையில் அப்படி நடந்துகொள்ளும் ஆசிரியர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

### நினைக்க.... ....சிந்திக்க

பின்னர் தனியார் கல்வி நிலையங்கள் என்று வந்தன. பாடசாலைகளில் வழங்கத் தவறிய கல்வியை அதே ஆசிரியர்கள் இந்நிலையங்களில் வழங்கி வந்ததாகக் குறைகள் வந்தன. ஆஸ்பத்திரி களில் கிடைக்காத வைத்திய ஆலோசனைகளை 'ஷனல்' பண்ணிப் பெறுவது போல...!

மக்களின் உயிரோடு விளையாடுகின்ற - அவர்களைப் பெரிதும் பாதிக்கின்ற மனிதநேயமற்ற நாடளாவிய வேலைநிறுத்தங்கள் நாட்டிலே நடந்ததுண்டு. அரசாங்க வைத்தியர்கள், தாதிமார்கள், மருந்தாளர்கள் வேலை நிறுத்தங்களால் நோயாளர்கள் வைத்திய வசதிகள் பெற முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்புவதையும் கவனிப்புத் தவறியதால் ஏற்பட்ட மாணவர்களையும் பார்க்கும்போதெல்லாம் எமக்கு வேலை நிறுத்தக்காரர்கள் மீது ஆத்திரந்தான் ஏற்படுவதுண்டு.

நல்ல வேளையாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இவ்வேலை நிறுத்தங்கள் பரவவில்லை என்று தென்னிலங்கையில் அப்போதெல்லாம் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள். அங்குள்ள மக்கள் போரின் கொடுமையால் ஏற்கனவே கடுமையாகப் பாதிக்கப்பட்டு இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையில் வாழ்பவர்கள். அவர்களை மேலும் மேலும் பாதிக்கக்கூடிய - பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது - போன்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு இடமில்லை என நாமும் பெருமிதமடைந்தோம்.

போராட்டங்கள் தேவைதான் ஆனால் எம்மைப் பொறுத்தவரை போரின் விளைவால் எத்தனையோ பேர்கள் வருமானத்தையே இழந்தும் வருமானத்தை ஈட்டித் தருபவரையே இழந்தும் இன்ன பிறவேதனைகளாலும் அவதிப்படுகிறார்கள்.

எங்கள் நிலை கஞ்சிக்கு உப்பில்லை என்றால உங்கள் நிலை பாயாசத்துக்குப் 'ப்பிளம்ஸ்' இல்லை என்ற கவலை இதுதான் எமது மாணவர்களின் நிலையும்.

எப்பொழுதோ சிரிக்கவும் சிந்திக்கவுமான ஒரு குட்டிக் கதை எழுதியிருந்தேன். அச்சுப் பிரதிகள் எல்லாம் காணாமற் போய்விட்டதால் ஞாபகத்தில் இருந்து அதனைத் தருகிறேன்.

ஓர் ஊழியர் அன்று பல விடயங்களுக்கும் அலைந்து திரிந்துவிட்டு கடைசியாகத் தமது வீட்டுத் தோட்டத்தில் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார். இவரைத் தேடிவந்தவர் இவரிடம் 'இன்று வேலைக்கு போகவில்லையா? ' என்று கேட்கிறார்.

அதற்கு இவர் 'இல்லை இன்று 'சிக்-லீவில்' நிற்கிறேன்' என்றார்.

*(சுகவீன லீவு என்றால், அவர் போத்து மூடிக்கொண்டு படுத்திருக்க வேண்டும் என நினைத்துக் கற்பனை செய்த கரு இது)*

- சண் அங்கிள்.

# பிறர் நியாயத்தையும் செவிமடுத்து உண்மைக்கு உயிர் கொடுப்போம்

*"ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது அவர் என்ன செய்தார் என்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமோ?' "* (யோவா-7:51)

கைதுகளும், மிரட்டல்களும், திடீர்த்தீர்ப்புகளும் இன்று சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டன. சுதந்திர வாக்குமூலம் பறிக்கப்பட்டு, எழுந்தமானத் தீர்ப்பு எழுதப்பட்டு ஏதுமறியாத ஏதிலிகளாக *'வெட்டுவதற்கு கொண்டு செல்லப்படும் சாந்தமான செம்மறி போல'* (எரே-11:19) விசாரணை ஏதுமின்றி நெடுங்காலம் சிறையில் தள்ளப்படுகிறார்கள்.

### 32ஆம் நாள்

இந்நிலை இன்று மட்டுமல்ல அன்று யேசுவுக்கும் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுதான். குற்றமற்றவரைக் கைது செய்து, கூண்டிலே நிறுத்தி, பொய்க்குற்றம்கூறி, கொலைக் குரவையிட்டு, குருசினில் குருதி கொப்பளிக்க கொடுந்தீர்ப்பிட்டுக் கொட்டமடித்து நீதியை, உண்மையைச் சாகடித்தது கொலைஞர் கூட்டம்.

நம் சகோதரர் தண்டனை பெற நாம் காரணியாக,காரணமாக இருந்ததில்லையா? எமது சுயநலத்திற்காக ஆடம்பரத்திற்காக அடுத்தவனைக் காட்டிக்கொடுத்து நாம் தப்பித்துக் கொள்ளவில்லையா?

### தவக்காலச் சிந்தனை

எமது குற்றத்திற்கு நாமே பொறுப்பேற்க வேண்டும். எம்மை நியாயப்படுத்துவதை விடுத்து பிறரின் நியாயத்தையும் செவிமடுத்து உண்மைக்கு உயிர் கொடுப்போம்.

இறை சமாதானத்துடன் கூடிய மனச்சாட்சி தீர்ப்புக் கூறட்டும். நிரபராதிகளையும், சிறைகளில் வாடுவோரையும் விடுவிக்கக் குரல் கொடுப்போம். (அப்போதுதான் யேசுவின் துன்பங்களும், எமது பாவத்தின் கனாகனமும் கரைந்து போகும். மன்னித்து, மன்னிப்புப் பெறும் மக்களாக மாறி மகிழ்வுடன் வாழவிழைவோம்.

- எஸ்.யேசுதாஸ்.

## தேவை

ஓவ் செற்(Off Set) மெஷின் மைண்டர் (நன்கு அனுபவம் உள்ளவர், பகுதிநேர வேலை செய்யக் கூடியவரும், முழுநேர வேலை செய்யக் கூடியவரும்) தேவை. அத்துடன் அச்சக வேலைகளுடன் அனுபவமுள்ள கணனியில் வேலை செய்யக் கூடியவரும் உடன் தேவை.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும்.

**தொடர்பு : விள.இல.1248**
**மே/பா உதயன்.** (85988)

## VACANCIES

MSF, French NGO, informs that a translator French/ English or French/ Tamil is needed

Persons interested, please contact *Mr.Christophe Lacoste* at MSF office.

**Address:**
No: 49,AMBALVANAR ROAD,
ATHIYADI, JAFFNA.
Tel:021-2274 (85940)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. மயில்வாகனம் ஜெயவரதராசா**
(Eng. Spl.Trd., Dip in Eng.)
(அதிபர் யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்)

அவர்கள் ஸ்ரீலங்கா அதிபர் சேவை (SLPS) தரம் 2-1 க்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் மேன்மேலும் சிறப்புற வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.

## மாபெரும் மலிவு விற்பனை

## லைடன் புடைவை நிலையம்

தமிழ், சிங்கள புதுவருடம்
மற்றும்
ஈஸ்டர் பண்டிகைகளை முன்னிட்டு
எதிர்வரும் 14-04-2001 வரையும்
சகல துணிவகைகளுக்கும் விசேட கழிவுகள்
வழங்கப்படும் என்பதை
சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

குறிப்பு: *சனி, ஞாயிறு முழுநாளும் கடை திறந்திருக்கும்.*

**லைடன் புடைவை நிலையம்**
(பஸ் நிலையம் முன்பாக)
*410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல. 2381* (C/15958)

## வெற்றிடங்கள்

**MSF** - பிரெஞ்சு வைத்திய அரச சார்பற்ற நிறுவனம் பிரெஞ்சு/ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு/தமிழ் மொழி பெயர்ப்பாளர் தேவை என்று அறிவிக்கின்றது.

இவ்விடயத்தில் கரிசனையுள்ளோர் திரு. கிறிஸ் தோபே லாகொஸ்ரே அவர்களுடன்

**MSF அலுவலகம்,**
*இல.49,அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்*
என்ற முகவரியில்
தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல. 021-2274 (85983)

## 45 ஆவது நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 - 10 - 1960 |  | 15 - 02 - 2001 |

**அமரர் சண்முகம் யோகநாதன்**
(ஈஸ்வரி வான் உரிமையாளர்)

அன்புள்ளத்தோடு,
அனைவரையும் அரவணைத்து
செல்வச் சிறப்போடு வாழ்ந்தவரே!
புன்னகை பூத்த உன்திருமுகம்
நாம் காண்பதெங்கே?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கிறோம்*

*பலாலி வீதி,*
*திருநெல்வேலி.* (86035)

வரதன் (மைத்துனர்)
கௌரி (சகோதரி)

## திருமண வாழ்த்து

யாழ். ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் இன்று (31.03.2001) சனிக்கிழமை இல்லற வாழ்வில் இணைந்து கொள்ளும்

**ச.சுப்பிரமணியம்**
தம்பதியின்
புதல்வன்
திருநிறை செல்வன்
**இராசகுமாரன்**
*(சாவகச்சேரி ஸ்ரீ விக்னேஸ்வரா கனகசபை)*



**மகாலிங்கம்**
தம்பதியின்
புதல்வி
திருநிறை செல்வி
**பத்மகலா**

தம்பதியினரை இல்லறத்தில் நல்லறம் செய்து ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*தற்காலிக முகவரி:*
*சாமியன் அரசடி,*
*கரவெட்டி.* (C/15969)

**திரு.திருமதி யோ.தயாபரன்**
விக்னேஸ்வரா வர்த்தக நிலையம்,
பழைய புகையிரத நிலையம் முன்பாக , மீசாலை.

## திருமண வாழ்த்து

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனித் திங்கள் 18ஆம் நாள் இன்று (31.03.2001) ஆஸ்திரேலிய வில்லவி நகர மண்டபத்தில் திருமணத்தில் இணைந்துகொள்ளும்

**திரு.திருமதி பொன்மயிலைநாதன்**
தம்பதிகளின்
புத்திரன்
திருநிறை செல்வன்
**கேதீஸ்வரன்**




**திரு.திருமதி சிவபாலன்**
தம்பதிகளின்
புத்திரி
திருநிறை செல்வி
**சிவரதி**

தம்பதிகளை மங்களம் பொங்க பல்லாண்டு காலம் வாழ்கவென மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.
பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பதினாறும் பெற்று
மங்களம் பொங்க மனமகிழ்ந்து வாழ்த்துவோர்.

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.* (86052)

**திரு.திருமதி விக்னேஸ்வரன்**
**திரு.திருமதி அம்பலவாணர்**

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி**
**ஆறுமுகநயினார் பவளம்மா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24-11-1940 | 10-04-2000 |

**திதி: ஸப்தமி 31-03-2001**

குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து பாசத்தின் பிறப்பிடமாகப் பிள்ளைக்கு நல் அன்னையாய் அன்பின் உறைவிடமாய் உறவினருக்கு அன்பு வழிகாட்டியாகத் திகழ்ந்து இறைவன் அடி சேர்ந்து ஆண்டு ஒன்று மறைந்தாலும் அம்மா!
உங்கள் பிரிவு மனத்தை வாட்டி வதைக்குதம்மா.....

ஆ.கமலக்கண்ணன் (மகன்)
*கந்தப்பா வளவு,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (85838)

*உங்கள் பிரிவால் துயருறும்*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவலைகள்

| | 14ஆம் ஆண்டு | 10ஆம் ஆண்டு | 9ஆம் ஆண்டு |
|---|---|---|---|
| | செல்வி ப.இராமநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.) | டாக்டர் சி.வேலாயுதன் (கண் வைத்திய நிபுணர்). | திருமதி ப.வேலாயுதன் |
| தோற்றம் : | 24.06.1926 | 04.10.1925 | 14.10.1930 |
| மறைவு : | 05.04.1987 | 31.10.1991 | 16.06.1992 |

**திதி: 31.03.2001**

*உனது அருளாலே உன்தாள் வணங்கி வேண்டுகின்றேன்*
*இறைவா! உன் அடியின் கீழ் மறுபடி சந்திக்க அருள்வாய்!!*

*126/4, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (85759)

- சகோதரி.

## வன்னிப் பிரதேசம் உட்பட்ட வடபகுதிக்கான

# மருந்து விநியோகத்தை கண்காணிக்க ஐ.நா. பிரதிநிதிகளுக்கு அனுமதி

கொழும்பு,மார்ச்31

விடுவிக்கப்படாத வன்னிப் பிரதேசம் உட்பட வடக்கில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் மருந்துப் பொருள்கள் ஒழுங்கான முறையில் உரிய இடங்களைச் சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்க இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகப் பிரதிநிதிகளுக்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

விடுவிக்கப்படாத வன்னிப்பிரதேசம் உட்பட வடபகுதியிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துப்பொருள்கள் ஒழுங்காகவும், உரிய முறையிலும் அனுப்பி வைக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டு வரும் புகாரை அடுத்தே சுகாதார அமைச்சு மேற்படி நடவடிக்கையை எடுத்திருக்கின்றது.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி தமது கண்காணிப்புப் பணியை உடனடியாக மேற்கொள்ளக்கூடிய வகையிலேயே சுகாதார அமைச்சு மேற்படி அனுமதியை வழங்கியிருப்பதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு - கிழக்கிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குச் சீரான முறையில் மருந்துப் பொருள்களை அனுப்பி வைப்பது குறித்த தீர்மானங்களை எடுக்கவே உயர் மட்டக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அரசாங்க மருந்துப் பொருள்கள் விநியோகப் பிரிவுப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கில் பணிபுரியும் பிராந்திய, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் உட்பட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெவ், எம்.எஸ்.எவ். ஆகிய தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர். (க)

## ஜி.சீ.ஈ (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்ற

# 80 வீத வரவு தேவை என்ற விதி வடக்கு–கிழக்கு பகுதிக்கு நீக்கம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,மார்ச்31

ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 80சதவீத வரவு தேவை என்ற நடைமுறை வடக்கு-கிழக்கு மாகாண மாணவர்களுக்கு நீக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் அடிக்கடி நிகழும் சுற்றிவளைப்புக்கள், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியவில்லை என்றும் -

ஜி.சீ.ஈ (உயர்தர) வகுப்பு மாணவர்கள் 80சதவீதமான வரவு இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்ற நடைமுறை வடக்கு-கிழக்கு மாணவர்களுக்குப் பொருந்தாது என்றும்-

இந்த நடைமுறையை நீக்கவேண்டும் என்றும் - தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கல்வி அமைச்சரைக் கேட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சர் அந்த நடைமுறையை வடக்கு - கிழக்குப் பகுதியில் நீக்குவதாக செல்வராசா எம்.பியிடம் உறுதியளித்தார். (க-3)

# கப்பலில் இலவசப் பாடநூல்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான இலவசப் பாட நூலகள் இறுதிக்கட்டமாக எடுத்து வரப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது காங்கேசன்துறைக்கு வந்துள்ள கப்பலில் தரம்3, தரம்8, தரம்11 ஆகிய வகுப்புக்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைவான புத்தகங்களே எடுத்துவரப்பட்டுள்ளன.

கணிதம், ஆங்கிலம் உட்பட அனைத்துப் பாடங்களுக்குமான ஆயிரத்து 758 பொதிகளில் எடுத்து வரப்பட்டுள்ள இப்புத்தகங்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் வைத்து தரம் பிரிக்கப்பட்டு தேவைக்கேற்ப ஐந்து வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே இரு தடவைகள் 5 லட்சத்து 35 ஆயிரத்து 511 பாடநூல்கள் எடுத்துவரப்பட்டிருந்தன.

தற்போது எடுத்துவரப்படும் 3 லட்சத்துக்கும் அதிகமான பாடநூல்களின் மூலம் ஏறத்தாழ குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களில் 90 வீதத்திற்கும் அதிகமானவர்களது இலவசப் பாடநூல் தேவைகள் பூர்த்தி செய்யப்படுமென அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-9)

## பெண்களுக்கான கருத்தரங்கு

'உணவுக் கலப்படமும் போஷாக்கான உணவு வகைகளைத் தெரிவு செய்தலும்' தொடர்பாக மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பெண்களுக்கான சுகாதார அறிவூட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இக்கருத்தரங்கு யாழ்.மருத்துவ பீட மாணவர்களின் வழிநடத்தலில் நடைபெறும்.

இக்கருத்தரங்குக்காக யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுகளில் இருநது பல பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க)

# புதுவருட விழா பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்ப்பாணம் நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புதுவருட விழாவையொட்டி மாணவர்களுக்கு இடையேயான பண்ணிசைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

அதிமேற்பிரிவு, மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் முதலாம் பரிசாகத் தங்கப்பதக்கமும், இரண்டாம் பரிசாக வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் பரிசாக வெண்கலப்பதக்கமும், இரண்டு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

அதிமேற்பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை (முழுப்பாடல்களும்), அபிராமி அந்தாதி(முதல் 20 பாடல்களும்), அதிமேற் பிரிவைச் சேர்ந்த ஆண்களுக்கு திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை (முழுப்பாடல்களும்) திருப்பொற்சுண்ணம் ஆகியவையும் போட்டிக்கு எனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை நீராவியடியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

# 'கண்தானம்' பற்றிய விழிப்புணர்ச்சி இங்கு ஏற்படுத்தப்படுவது அவசியம்

மனிதனின் முக்கியமான உறுப்புகள் (இழையங்கள்) விபத்தினாலோ நோயினாலோ செயலிழந்தால் அல்லது இழக்கப்பட்டால், அவற்றிற்குப் பிரதியீடாக, அம்மனிதனின் முக்கியமற்ற பகுதியிலுள்ள இழையத்தை அல்லது இறந்த வேறொருவரது சடலத்திலிருக்கும் இழையத்தை அல்லது விலங்கு ஒன்றின் இழையத்தை எடுத்துப் பொருத்துவதில் மருத்துவ உலகம் வெற்றிகண்டுள்ளது.

'ஓட்டோக்கிறாவ்ற்'(AUTOCRAFT) 'ஹோமோக்கிறாவ்ற்'(HOMOCRAFT) 'ஹெற்றறோக்கிறாவ்ற்' (HETERO-CRAFT) என்ற மூன்று முறைகள் மூலம் உறுப்புக்களை மாற்றும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

### 'ஓட்டோக்கிறாவ்ற்'

ஒருவரது உடலிலுள்ள இழையமொன்று அவரது உடலின் வேறொரு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவது ஓட்டோகிறாவ்ற் எனப்படும். இம்முறையின் மூலமாக முக்கியமான எலும்புகள் - விபத்துகள், குண்டு வெடிப்பு, ஷெல் வெடிப்பு, துப்பாக்கிச் சூடு போன்றவற்றால் (ஒன்றுசேர்த்து சிகிச்சை அளிக்க முடியாதவாறு) சிதைவுறும் சந்தர்ப்பத்தில் நோயாளியின் முக்கியமற்ற எலும்பை எடுத்து, சிதைவடைந்த எலும்புக்குப் பிரதியீடு செய்யப்படுகிறது. எரிகாயங்களினால் தோல் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் முக்கியமற்ற பகுதிகளிலிருந்து தோல் எடுக்கப்பட்டு எரிகாயம ஏற்பட்ட இடங்களில் பொருத்தப்படுகிறது. விகாரமான முகத் தோற்றத்தைக் கொண்டிருப்பவர்களது முகத்தை அழகுபடுத்தும் சத்திர சிகிச்சையின் (Cosmetic Surgery) போதும், முக்கியமற்ற இடத்தில் இருக்கும் தோல் அகற்றப்பட்டு முகத்தில் பொருத்தப்படுகிறது. வழுக்கைத் தலை (தேங்காய் மொட்டை) ஏற்பட்டவர்களுக்கு மயிர் அடர்த்தியாக இருக்கும் இடங்களிலிருக்கும் மயிர்களை எடுத்து தலையில் பொருத்தி அழகு செய்யப்படுகிறது.

**இன்று உலக கண் தான சிந்தனைத் தினமாகும். அதனை ஒட்டி இக கட்டுரை பிரசுரமாகின்றது.**

### 'ஹெற்றறோக்கிறாவ்ற்'

மனிதனின் பாதிக்கப்பட்ட இழையத்துக்குப் பிரதியீடாக விலங்குகளின் இழையத்தைப் பொருத்துதல் 'ஹெற்றறோக்கிறாவ்ற்' எனப்படும். கொரில்லா (Guerrilla) எனப்படும் மனிதக் குரங்கின் ஈரலை, ஈரல் பாதிக்கப்பட்டோருக்கும் பன்றியின் சதையியை சதையி செயலிழந்துள்ள நீரிழிவு நோயாளிகளுக்கும் பொருத்துவதற்கான பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 'ஹோமோகிறாவ்ற்'

இறந்த ஒருவரது உடலில் நன்கு இயங்கத்தக்க நிலையிலிருக்கும் இழையத்தை, அது கெடுவதற்கு முன்பதாக அகற்றி, அதை ஒத்த இழையம் செயலிழந்தவருக்குப் பொருத்துதல் 'ஹோமோகிறாவ்ற்' எனப்படும். இம்முறை மூலம் இருதயம், ஈரல் (ஈரலுடன் சதையியும் தேவை ஏற்படின் மாற்றீடு செய்யப்படும்), சுவாசப்பைகள், கண், எலும்பு, எலும்பு மச்சை, தோல், சிறுநீரகம், மயிர் போன்றவை மாற்றீடு செய்யப்படுகின்றன. இறந்தவர், தனது உடலின் இழையங்களை தானம் செய்ய விருப்பம் தெரிவித்திருந்தால், இவை அவரது சடலத்தில் இருந்து அகற்றப்பட்டு இழைய வங்கிகளில் சேமிக்கப்பட்டு தேவை ஏற்படும் போது நோயாளிகளுக்குப் பொருத்தப்படுகின்றன. இவற்றுள் கண்ணின் தேவை அதிகமாக இருப்பதாலும், கண் விழிவெண்படல மாற்றுச் சத்திர சிகிச்சை (CADAVER CORNEA TRANSPLANT) செய்யும் வசதி யாழ்ப்பாணத்தில் இருப்பதாலும் கண தானச் சிந்தனை தினமான இன்று அதைப் பற்றி விரிவாக நோக்குதல் பொருத்தமானதாக அமையும். கண் கருவிழி மாற்றுச் சத்திரசிகிச்சையின் வெற்றியே ஏனைய இழைய மாற்றுச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதற்கு அத்திவாரமாக அமைந்ததாகும்.

கண்கள், காண்கின்ற பொருள்களை நாங்கள் பார்த்து உணர்தலைத் தொலைக்காட்சியில் தெரியும் காட்சிகளுக்கு ஒப்பிடலாம். கண், 'அன்ரனா' போன்றது. மூளை தொலைக்காட்சிப் பெட்டி போன்றது. 'அன்ரனா' வில் காட்சிகளைக் காண முடியாது. அன்ரனா மூலம் தொலைக்காட்சிப் பெட்டியைச் சென்றடையும் காட்சியை தொலைக்காட்சிப் பெட்டியில் தான் பார்க்க முடியும். இதேபோல கண்களில் காட்சிகளை நாங்கள் காண்பதில்லை. கண்களில் படுகின்ற காட்சிகளின் விம்பங்கள் பார்வை நரம்புகள் மூலம் மூளைக்குக் கடத்தப்பட்டு மூளையில் தான் காட்சியைக் காண்கிறோம், உணர்கிறோம்.



'அன்ரனா' போல அல்லது 'வீடியோ கமெரா' போலத் தொழிற்படும் கண், காட்சிகளை கண்ணினுள்ளே எடுப்பதற்கு விழிவெண்படலம், விழிவில்லை, விழித்திரை ஆகியவை நல்ல நிலையிலிருந்து முறைப்படி தொழிற்படவேண்டும். இதன்மூலம், விழித்திரையில் குவிக்கப்படும் விம்பங்கள் - காட்சிகள் மூளைக்குக் கடத்தப்படும்போதே

# இறந்த பின்னரும் உலகைக் காணலாம்

காட்சிகளை நாங்கள் காண்கிறோம். விழிவெண்படலம், விழிவில்லை, விழித்திரை, பார்வை நரம்பு இவைகளில் எவற்றில் பாதிப்பு ஏற்பட்டாலும் எங்களால் பார்க்க முடியாது. பார்வையை இழந்து விடுகிறோம்.

விழிவெண்படலத்தில் பாதிப்பு ஏற்பட்டு பார்வை இழப்பு ஏற்பட்டால், இறந்த ஒருவரது சடலத்தில் (CADAVER) நல்ல நிலையில் இருக்கும் விழிவெண்படலத்தை எடுத்துப் பிரதியீடு செய்து மாத்திரமே அவருக்கு மீளவும் பார்வை வழங்க முடியும். இதற்குக் கண்தானம் செய்யப்படுதல் அவசியமாகும். ஒருவர் தான இறந்த பின் தனது கண்ணைத் தானம செய்வதாக எழுதி வைத்த பின் இறந்தால் அல்லது இறந்தவரின் உறவினர் இறப்பு நிகழ்ந்து ஐந்து மணித்தியாலங்களுக்குள் கண்தானம் செய்ய விரும்புவதாக எழுத்து மூலம் அறிவித்தால் கண்களைத் தானமாக ஏற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இலங்கையின் தென்பகுதியில் டாக்டர் ஹட்சன் சில்வா அவர்களும் வட பகுதியில் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களும் கண்தானத்தின் மகிமையை மக்களுக்கு எடுத்துரைத்துக் கண்தானம் செய்யும் மனப்பாங்கை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஹட்சன் சில்வா அவர்களுடன் பௌத்த மத குருமாரும் இணைந்து கண்தானத்தின் சிறப்பை மக்களுக்கு எடுத்துரைத்ததாலும், அவர் டாக்டராக இருந்ததாலும் தென்பகுதியில் கண்தானம் செய்வோர் தொகை பெருகியது. கண் வங்கி அமைந்தது. அது இழைய வங்கியாக வளர்ந்தது. ஆனால், தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் சித்த (வர்ம) வைத்தியர் குடும்பத்தில் பிறந்தவரான போதிலும் வைத்தியத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. சைவ மத குருமார் கோயில் பூசை, திவஷம், மானயம் போன்ற சமய நிகழ்ச்சிகளுக்கு அப்பால் தாங்கள் தொழிற்படுவதைச் சைவசமயம் அனுமதிக்கவில்லை எனக்கூறிக் கண்தானம் பிரசாரத்தில் ஈடுபட முன்வரவில்லை. இதனால் வடபகுதியில் இன்னமும் கண்தானம் பிரபல்யமடையவில்லை. வடபகுதியில் போதிய கண் டாக்டர்கள் இல்லாமையும், சிறந்த சத்திர சிகிச்சை உபகரணங்கள் இன்மையும கண்தானத்தை ஏற்பதில் தடையை ஏற்படுத்தின. தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களின் மறைவின் பின் அவரது நினைவாக இயங்கிய நினைவுக் குழுவின் உறுப்பினர்களாக இருந்த முதியோர்களுள் ஏறக்குறைய எல்லோரும் அமரத்துவம் அடைந்துவிட்டதால் அக்குழுவினால மேற்கொள்ளப்பட்ட கண்தானப் பிரசாரமும் நின்றுவிட்டது. இந்நிலையில திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டுவதும், லையன்ஸ் கழகம் யாழ்போதனா வைத்தியசாலைக்குப் பெறுமதிமிக்க கண்சத்திரசிகிச்சை உபகரணங்களை வழங்கியிருப்பதும வட பகுதியில் கண் தான நடவடிக்கைகள் எழுச்சி பெறும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன.

கண்தானம் தொடர்பாகப் பின் வருவனவற்றை அறிந்திருப்போமாக.

(1) மரணம் சம்பவித்து ஆறு மணித்தியாலங்களின் பின் கண் கெட்டுவிடும். அதற்கு முன் கண் தானம் செய்ய வேண்டும்.

(2) கண்ணை விலைக்கு விற்பதும், உரிய வைத்தியர் அல்லாதவர் அதனை அகற்றுவதும் குற்றமாகும்.

(3) யாழ்ப்பாணத்தில் கண்களை நெடு நாள்களுக்குப் பாதுகாக்கும் வசதி இல்லாமையால், அவை குளிரூட்டியில் வைக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுள் அவை தேவைப்படுவோருக்குப் பொருத்தப்படும்.

(4) சடலங்களிலிருந்து கண்களை அகற்றுவதற்குச் சில நிமிடங்களே செலவாகும்.

(5) கண் அகற்றப்பட்ட குழிகளினுள் பஞ்சு உருண்டைகள் வைக்கப்படுவதால் கண் அகற்றப்பட்ட அடையாளமே தெரியாது.

(6) இறந்தவரின் இரத்தம் உறைந்து விடுவதால் கண்களை அகற்றும் போதோ, அதன் பின்னரோ இரத்தம் வெளியேறாது.

(7) 'கற்றாக்ற்' விழிவில்லை நரைத்து வெளிறி ஒளிபுகவிடாது தடுப்பதால் ஏற்படுகிறது. இந்நோய் உள்ளவர்களின் விழிவெண்படலம் நல்ல நிலையில் இருப்பின் இவர்களது கண்களும் தானம் செய்யத்தக்கனவாகும். 'கற்றாக்ற்' சத்திரசிகிச்சை செய்தவர்களின் விழிவெண்படலம் நல்ல நிலையில் இருக்குமாயின் அவர்களும் கண்தானம் செய்யலாம்.

(8) காசநோய், புற்றுநோய், பாலியல் நோய்கள், செப்ரிசீமியா, போலியோ, கொப்புளிப்பான், பாம்புக்கடி, நஞ்சருந்தல், நஞ்சூறல், விசர் நாய்க்கடி, மூளைக்காய்ச்சல், மோசமான எரிகாயங்கள் போன்றவற்றால் இறப்போரது (இழையங்கள்) கண்கள் தானமாக ஏற்கப்படுவதில்லை.

இறந்தவரது கண்கள் இன்னொருவரது உடலில் உயிருடன் இருந்து அவருக்கு உதவுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைய விரும்பினால் இறந்த உடல்களில் உள்ள கண்களை, அவர்களது உறவினர்கள் தானம் செய்ய முன்வரவேண்டும்.

**"நந்தன்"**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
-
07
-
1966



மறைவு
24
-
03
-
1999

## திருமதி வசந்தி கணேசலிங்கம்

திதி: 31.03.2001

ஆண்டுகள் இரண்டு உருண்டோடி விட்டனவே!
ஆறவில்லை எம் துயரம்; மீளவில்லை உம் நினைவிலிருந்து;
ஈண்டும்மை நினைந்து நாம் இதய அஞ்சலி செய்கின்றோம்!
தேடற்கரிய அன்புத் தெய்வமே! வாடுகிறோம் நாம்;
மீண்டுமொருமுறை வந்தொருக்காலும் திருமுகத்தைக் காட்டீரோ?
வாழும் வகையறியாது நாம் தவிக்கின்றோம் அன்னையே!
மாண்டு நீர் போனதால் எம்மனை ஒளி இழந்து கிடக்குதம்மா!
ஆடவல்லான் பொற்பாதம் அணைந்து நீர் வாழியவே!

துயருறும்:
ப.கணேசலிங்கம் (கணவர்)
க.பிரசாந்தினி, க.அகிலேசன் (பிள்ளைகள்)
திருமதி ச.பரமேஸ்வரி (தாய்)
திரு.திருமதி அருந்தவரத்தினம் (சகோதரன்)
திரு.திருமதி சபேஸ்வரன் (சகோதரன்) (நோர்வே)

"இரத்தின வாசா"
*இராஜ வீதி,*
*நீர்வேலி வடக்கு.*

(C/15982)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்31

வேலையற்ற பட்டதாரிகளுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் யாழ்.ஆரிய குளத்தடியில் உள்ள புதிய உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

1997, 98, 99 ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்று வெளியேறி இது வரை எவ்வித வேலைவாய்ப்பும் பெறாமல் சங்கத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தங்கள் பதிவுகளை இவ்விரு நாள்களிலும் வருகை தந்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

## மடு மாதா திருச்சொரூபம் மலையகத்தில்!

கொழும்பு,மார்ச்31

நாட்டுக்கு நல்லாசி வேண்டி தென பகுதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட மடுமாதாவின் திருச் சொருபம் நேற்றுமுன்தினம் மலையகத்தின் தலைநகரைச் சென்றடைந்தது.

கண்டி மறைமாவட்ட ஆயர் ரியான பெர்னாண்டோவினால் கண்டி அந்தோனியார் ஆலயத்தில் ஆராதனை நடத்தப்பட்டது. பின்பு திருச் சொருபம் ஹற்றனுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. (உ-10)


## தேவை

அனுபவமுள்ள வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். உடன் விண்ணப்பிக்கவும்(லிப்ற் வேலை)

தொடர்பு:
*யூனியன் சேவிஸ் ஸ்ரேசன்.*
இருபாலைச் சந்தி.

(86072)


## முதலீட்டுச் சபைக்கு புதிய தலைவர்?

இலங்கை முதலீட்டுச் சபையின் புதிய தலைவராக பிரபல தொழிலதிபர் மனோ செல்வநாயகம் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க நாடு திரும்பியதும் இந் நியமனம் வழங்கப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பதவியில் இருந்த திலான் விஜேசிங்க மீது நீதிமன்றத்தில் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதை அடுத்து அவர் அப்பதவியில் இருந்து விலகியது தெரிந்ததே.

புதிய ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கபடும்வரை கைத்தொழில்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜி. வீரசேகராவை இப்பதவிப் பொறுப்பைக் கவனிக்குமாறு கைத்தொழில் துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் பணித்துள்ளார். (உ)

# 45 ஆம் நாள் நினைவு அலைகள்

தோற்றம்
21
-
08
-
1981



மறைவு
15
-
02
-
2001

## செல்வன் நா.சதீஸ்கரன்

உந்தன் நினைவு அலைகள்
ஓயாது நாளும் பொழுதும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் -
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அம்மா, சகோதரி மற்றும்
உறவினர்கள்.

*கைதடி.*

(C/15980)

உ
*சிவமயம்*

# திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் சுப மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் இன்று (31-03-2001) சனிக்கிழமை பகல் 11.25 மணி முதல் 1.25 மணிக்குள் வரும் மிதுன லக்கினமும், மிருகசீரிட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

| எங்கள் புத்திரன் | | எங்கள் புத்திரி |
|---|---|---|
| *மாதவன் (ஜெர்மனி)* |  | *சீதா* |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

இறைவன் திருவருளால், பம்பலப்பிட்டி, கொம்யூனிற்றி சென்றர் - திருமண மண்டபத்தில், திருமாங்கல்ய தாரண வைபவம் நடைபெறுகின்றது. இவ்வைபவத்தினை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**திரு.திருமதி மா.சரவணபவன்**
(குடும்பம்)
*புலோலி வடக்கு, பருத்தித்துறை.*

**திரு.திருமதி கனக.குமாரசாமி**
**உரிமையாளர்: ராஜீ நகையகம்**
*40, மெயின் வீதி, சங்கானை*
**ஜோதிட ஆய்வு நிலையம்,**
*நிகரை வீதி, சங்கானை.*
**சாயீ - கல்வி நிலையம்,**
*நிகரை வீதி, சங்கானை.*

குறிப்பு:
*அனைத்து வ/பி/போ/சபையினரும் இவ்வறிவித்தலை ஏற்கவும்.*

(86056)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்:

நிகழும் விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் இன்று (31-03-2001) சனிக்கிழமை காலை 6.12 மணி தொடக்கம் 6.51 மணி வரையுமுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த நேரத்தில்

எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற

## ★ திருமகள் வாசம் ★

என்னும் புதுமனையில் நாங்கள் பிரவேசம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமூகம் தந்து புதுமனையை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நிகரை வீதி,*
*சங்கானை.*

*தங்கள் நல்வரவை நாடும்,*
ஆசைப்பிள்ளை குணசேகரம் (குணம்)
மனைவி திலகராணி (சோபனா)
ஆசைப்பிள்ளை அன் சன் நகைத்தொழிலகம்.

(86068)

# JAFFNA SCIENCE ASSOCIATION

## 9th Annual Sessions

**4, 5 & 6 April 2001.**

**Venue : Library Auditorium, University of Jaffna.**

**First day Sessions (04-04-2001)**

9.00 hr Inauguration address: By the Chief Guest Prof. Claudette Bardin Ph.D, M.D Mc Gill University, Canada.

10.15 hr Theme Seminar: "Developmental Challenges of the 21st Century with Reference to Jaffna District"

**Contributors :** Prof.Ms.V.Arasaratnam, Dr.S.Mahesan Mr.S.Rajadurai, Prof.C.Sivagnanasundaram, Mr.M.Nadarajasundaram, Mr.K.Pooranachandran.

13.30 hr Chairman's Address (A):Mr.A.Panchalingam "பாடசாலை மட்டக் கணிப்பீடு - ஒரு நோக்கு" (School based Assessment - A review)

14.15 hr Review Lecture : Prof.S.K Sitrampalam "Proto-Historic Sri Lanka - A review"

15.15 hr Chairman's Address(B): Prof.A.Navaratnarajah "Invitro - Fertilization"

**Second day Sessions (05-04-2001)**

14.00 hr Chairman's Address (C): Dr.K.Sivanesan "Medical Advances And Related Factors"

14.45 hr Review Lecture Dr.D.C.Ampalavanar "*Helicobacter Pylori* and Peptic Ulcer Disease"

15.45 hr Popular Lecture : Vithuvan.K.Sockalingam "பண்டைத் தமிழரின் ஒழுக்க, சமூகவியற் கோட்பாடுகள்" (The Ethical and Social concepts of Ancient Tamils)

**Third day Sessions (06-04-2001)**

9.00 hr Chairman's Address (D):Mr.V.P.Sivanathan "Trends and Prospects of Jaffna Economy"

9.45 hr Popular Lecture : Mr.G.Mikunthan "Eco – Friendly Management of Agriculture Pests"

2.00 hr Presidential address : Dr.N.Sivarajah "Health care of North-East Sri Lanka *reflections for the Future*"

All are welcome

For the details contact the General Secretary.
**Dr.S.Srisatkunarajah**
**General Secretary.**

Compliment:
STP COMPUTER WORLD
JAFFNA.

# சத்தியத்தின் நித்தியத்தை திடமாக நம்பிய கர்மயோகி

தமிழ்மக்களின் அரசியல் வரலாற்றில் தமக்கென ஓர் ஒப்பற்ற இடத்தை வகிப்பவர் தந்தை செல்வநாயகம் என்றால் அது புனைந்துரையன்று.

'தந்தை', 'மூதறிஞர்', 'பெரியவர்', 'ஈழத்துக் காந்தி' என அன்பாகவும் பண்பாகவும் அழைக்கப்படுபவர் ஈழத்து அரசியலில் 'கண்ணியம்', 'நாணயம்', ஆகிய சொற் பிரயோகங்களைப் புகுத்தியதோடு அந்நெறிப்படி வாழ்ந்தவர். நம் நாட்டுப் பிரதமர்களாலும் பிற அரசியல் வாதிகளாலும் மிகக் கடினமான ஆனால் ஆழமான மனிதரென்றும், எச்சந்தர்ப்பத்திலும் எதற்கும் தமது இலட்சியத்தை விலைபேசாத மாமனிதன் எனவும் வர்ணிக்கப்பட்டவர். 1898இல் மலேஷியாவில் பிறந்து 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மரணத்தைத தழுவும்வரை உள்ள தந்தையின் காலப்பகுதி சத்தியத்தின் நித்தியத்தை நம்பிய ஒரு கர்மயோகியின் இலட்சியப் பயணமாகவே விளங்குகிறது.

தந்தையின் வாழ்க்கை வரலாறானது தமிழ்மக்களின் அபிலாஷைகள் பல்வேறு கட்டங்களில் பெற்ற பரி



யாழ்.நகரிலுள்ள தந்தையின் சிலை

ணாம வளர்ச்சியின் வரலாறு என்றால மிகையாகாது. 1944இல் அரசியலில் இணைந்த இவர் அன்றைய தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் அங்கத்தவராகத் தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். இக்காலந்தான் தமிழ்மக்களின் அபிலாஷையாக 50:50 என்ற கோரிக்கையை

## இன்று தந்தை செல்வாவின் நினைவுதினம்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் சோல்பரி அரசியல் சீர்திருத்தக் குழுவினர் முன் வைத்த காலமாகும். நடைமுறைச் சாத்தியமற்ற இக்கோரிக்கை நீண்ட காலமாகத் தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களின் வெளிப்பாடாகவும் விளங்கியது. அதாவது நாடாளுமன்றத்தில் தமது எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலமும் தமது சமூகத்தின் நலன்களைப் பாதுகாக்கலாம் என்பதாகும்.

### மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிப்பு

1948 இல் நாடு சுதந்திரமடைந்த அடுத்த ஆண்டிலே தமிழ் மக்களின் ஒரு பகுதியினரான தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதனால் நாடாளுமன்றத்தில் தமிழ்மக்களின் பலம் சரி அரைவாசியாக்கப்பட - சிங்கள மக்களின் பிரதிநிதித்துவமும் முதன்மையும் புதிய ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட - சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் உத்தரவாதம் அளிக்காத ஓர் அரசியற்றிட்டமே செயற்பட்ட காலமது. மலையகத் தமிழரின் வாக்குரிமைப் பறிப்பானது ஈழத் தமிழரின் உரிமைகளுக்கு ஆப்பு வைக்கும் நடவடிக்கைகளில் முன்னோடியே என உணர்ந்த தந்தை அவர்கள் 1949 இல் தமிழ்மக்களின் நலன்களுக்காக உழைக்கும் ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். அதுதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும். அன்று அவர் தீர்க்கதரிசனத்துடன் கூறியது இதுதான் தமிழமக்களுக்கு இரண்டே இரு வழிகள்தான் உண்டு. ஒன்று சிங்கள மக்களிடம் சரணாகதி அடைதல். இது கோழைத்தனம். மற்றையது உரிமைக்காகப் போராடுவது. இது வீரனின் பண்பாகும். இதனையும் சாத்வீக அடிப்படையில், காந்திய நெறியில் நின்று செயற்படுத்துவதில் அக்கறை காட்டினார்.

தந்தையின் தீர்க்க தரிசனமிக்க சிந்தனையை இலங்கைத் தமிழரசுக் கட்சியை 18-12-1949 இல் மருதானையில் ஆரம்பித்து வைத்தபோது

## தந்தையின் அரசியல் பயணம் தமிழரின் போராட்ட வடிவம்

ஆற்றிய உரை மிகவும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது. இந்நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்கள் இந்நாட்டில் மாறிமாறி அரசியல் அதிகாரத்தை வரலாற்றுக் காலத்தில் பெற்றிருந்தனர் எனக் கூறியது மட்டுமன்றி தனியான தேசிய இனத்துக்குரிய அடைமானங்களை உடையவர்களாய், பாரம்பரியப் பிரதேசத்தில் வாழ்ந்து வருபவர்களாய், தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாய் விளங்குகிறார்கள் எனவும் எடுதது்க் காட்டினார். இத்தகைய இலட்சியங்களை ஒரு சமஷ்டி அரசியல் திட்

**பேராசிரியர்**
**சி.க.சிற்றம்பலம்**
**(தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்).**

டத்தின் மூலம்தான் எட்டமுடியும் எனவும் நம்பினார். அன்று அவர் கூறியது இதுதான்.

"நாம் கோருவது இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும், ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டிற்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசு இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ்த் தேசிய இனம் பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமானால இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாகின்றது."

### வீடு பேறின் சின்னம்

மேற்கூறிய அமைப்பில்தான், தமிழர் தமது தாயகத்தில் உரிமையுடன வாழலாம் என இவர் தீர்க்கதரிசனமாக நம்பினார். இத்தகைய நோக்குடன்தான் தமிழரசுக் கட்சியின் சின்னமாக வீடு தேர்ந்தெடுக்கப்பட்டது. தமிழ்மக்களுக்கு விடுதலையை, வீடு பேற்றைக் கொடுப்பதும் இவ்வீடுதான் என்பதும் தமிழரசுக் கட்சியை உருவாக்கிய இச்சிந்தனைச் சிற்பியின் கருத்துப்போலும். இதே காலத்தில் தான் தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத் தமிழர்களுக்கு உதய சூரியனாக உதயமானதும் குறிப்பிடத்தக்கது. தந்தையின் அரசியல் கட்சி பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக உதய சூரியன் சின்னத்தில் உருமாறியதும் வரலாறு ஆகும்.

வடக்கு, கிழக்கு, மலையகம் எனச் சிதறுபட்டு நின்ற தமிழ் மக்களை மட்டுமன்றி, தமிழ் பேசும் முஸ்லீம்களையும் இணைத்து 'தமிழ் பேசும் மக்கள்' என்ற கோட்பாட்டை உருவாக்கிய மாமனிதர் தந்தையே. இத்தகைய பணியைத் தந்தைக்கு முன்பு வாழ்ந்த தமிழ்த் தலைவர்களால நிறைவேற்ற முடியவில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் மிகவும் கண்ணியமான மனிதன் எனப் போற்றப்பட்ட இவருக்கு உறுதுணையாகப் பல தலைவர்கள் அக்காலத்தில் விளங்கியதும குறிப்பிடத்தக்கது. கு.வன்னியசிங்கம், சுநடராசா, ந.இ.இராஜவரோதயம், சி.மு.இராசமாணிக்கம், இ.மு.வி.நாகநாதன், மு. திருச்செல்வம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களில் தமது பல்கலைக்கழக வாழ்விலேயே தமிழ்த் தேசியத்துடன் தம்மை இணைத்துக்கொண்ட தலைவர் அ. அமிர்தலிங்கம தந்தையின வாரிசாக, தந்தைக்கு உறுதுணையாக நின்று இளைஞர் சமுதாயத்தைத் தந்தையின் பாசறையில் இணைத்தவர், அது மட்டு மன்றி ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தைச் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு இட்டுச் சென்ற பெருமையும் இவருக்குண்டு.

### அரசியல் பயணம்

தந்தையின் அரசியல் பயணம் தமிழ்மக்கள் தமது உரிமைகளுக்காக மேற்கொண்ட போராட்ட காலம் என்றாலும் மிகையாகாது. போராட்டம், கதவடைப்பு, கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம், பாதயாத்திரை, சத்தியாக்கிரகம் போன்ற பதங்கள் தமிழ்மக்களின் அரசியலில் முதன்மைபெற்ற காலமும் இ∴தாகும். சத்தியாக்கிரகத்தை இராணுவ பலத்தால் அடக்கி, தலைவர்களைக் குண்டாந்தடிகளால அடித்து, மறியலில் இட்டு, தமிழ்மக்களின் உரிமைகளை நசுக்கிக் கட்சியின் பத்திரிகையாகிய சுதந்திரன் ஆகியவற்றை அவசரகாலச்சட்டத்தின்கீழ் தடைசெய்த காலமும் இதே காலந்தான். சுருக்கக்கூறின் சாத்வீகப் போராட்டத்தை அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவ மூலம் அடக்க மாறிமாறி வந்த மத்திய அரசுகள் முயன்றகாலமும் இக்காலந்தான். இதன் உச்சக்கட்டம்தான் தற்போதைய அரசியல் சூழலாகும்.

இக்காலத்தில்தான் தமிழ்மக்களின் உரிமை பற்றிக் காத்திரமான பேச்சுக்களும் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றன. மாறிமாறி வந்த சிங்களக் கட்சிகளுடனும் பிரதமர்களுடனும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் அமுலாக்கம் பெறாது செயலிழந்த காலமும் இக்காலந்தான்.

தந்தையின் செயற்பாடுகள் நாடாளுமன்றத்தில் உரக்கக் கத்தியோ அன்றி அரசுகளுடன் ஒப்பந்தங்கள் செய்தோ தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெறமுடியாது என்பதைத் துலாம்பரப்படுத்தின. சிங்களத் தலைவர்கள் இதய சுத்தியுடன் தமிழ் மக்களை அரசியலில் பங்காளிகளாக்க விரும்பவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டின. சர்வதேச ரீதியிலும் தமிழ்மக்களின் கோரிக்கைகளின் நியாயத்தை உணர்த்திய காலமும் இ∴தாகும். சாத்வீகம் அடக்கப்பட்டால் அதன் எதிரொலி ஆயுதப் போராட்டமே என்பது பற்றியும் கட்டியம் கூறி நின்ற காலமுமாகும்.

### மூன்றாம் தரப்பு தலையீட்டை வலியுறுத்தியவர்

சுருங்கக்கூறின் தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி, ஒரு கண்ணியமான அரசியலை நடத்தி, இந்நாட்டில் சம உரிமைகளுடன் வாழ்வதானால் போராட்டம் மூலம்தான் அதனைச் சாதிக்கலாம் எனவும் உணர்த்தியவர் தந்தை செல்வநாயகம் அவர்களாகும். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ்மக்களின் உரிமைகளை நல்கமாட்டா என்பதையும் கண்ணாரக் கண்டவரும் இவர்தான். மூன்றாம் தரப்பின் தலையீடும் மத்தியஸ்தமும்தான் தமிழ் மக்களுக்கு விடிவு தரும் என்பதை அவர் செய்துகொண்ட ஒப்பந்தங்களும், அவை செயலாக்கம் பெறாமையும் எடுத்துக்காட்டியுள்ளன.

சர்வதேச ரீதியில் தமிழ்மக்களின் உரிமை பற்றி பேச வைத்தவர் மட்டுமன்றி சர்வதேச சமூகம் இதிலுள்ள நியாயத்தை உணர்ந்து அக்கறை கொள்ள வைத்தவர் தந்தையும் அவர் வழிவந்த தனயர்களுமாவர்.

### மாமனிதன்

தமது இலட்சியத்திலிருந்து விலகாது, அதை எதற்கும் விலைபேசாது, தமிழரின் பிரச்சினையை கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக அரை குறைத்தீர்வுகள் மூலம் தீர்க்காது, பிரச்சினையைப் பிரச்சினையாக வைத்து பிற்சந்ததியினரிடம் இப்பிரச்சினையைப் பக்குவமாகக் கையளித்த மாமனிதன் தந்தை செல்வநாயகம்தான். மாறி மாறி வந்த அரசுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைத் தமது இலட்சியத்தின் தீர்வு என அவர் ஒருபோதும் நம்பவில்லை. மாறாக, அவ்விலட்சியத்தை அடையும் ஏணிப்படிகளாகவே அவர் விசுவாசமாக நம்பினார். எனவே நமது தனித்தேசிய இனத்தன்மை, தாயக உரிமை ஆகியவற்றின் அடிப்படையிலேதான் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு அமைய வேண்டும் என உழைப்பதுதான் தந்தை செல்வநாயகத்திற்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

☆




## தேவை

TYPE SETTING அனுபவம் உடையவர்கள் தேவை. PAGE MAKER 6.5 அல்லது COREL DRAW 9 முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, முன் அனுபவம், எதிர்பார்க்கும் வேதனம் ஆகிய விவரங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 05-04-2001.**

விளம்பர இலக்கம் - 1246

மே/பா உதயன், யாழ்ப்பாணம் (C/15889)



குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ

## குமாரிக்கா ஷம்போ




நெல்லி
கேசம் அகாலத்தில் உதிர்வதைத் தடுக்கிறது




அலோவேர
கேசம் வரண்டு போகாமல் தடுக்கிறது




வேப்பஞ்சாறு
கிருமிகளை அழித்து பொடுகை நீக்குகிறது

குமாரிக்கா ஷம்போவில் மட்டுமே கலந்துள்ள
இயற்கையான கற்றாளைச் சாறு சிரசுக்குக் குளிர்மையைக் கொடுக்கின்றது!
**தற்போது 8 ml, 100 ml அளவுகளில் கிடைக்கின்றன!!**

விநியோகஸ்தர்கள்:- **நூபா பன்முக வர்த்தகம்**
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**T.P:-2479**
(சி15764)

குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ குமாரிக்கா ஷம்போ

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை யும் (யாழ்.பஸ் நிலையத்துக்கு முன் பாகவுள்ள) மின்சார நிலைய வீதி யையும் இணைக்கும் வீதியில் யாழ்ப் பாண பிரதம தபால்கந்தோர் முன்பாக கடைகள் கட்டுவதற்கு வசதியான காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு: குமார், யாழ்ப்பாணம்.
**T.P 2917** (86082)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

சுன்னாகத்துக்கும் மருதனார் மடத துக்கும் இடைப்பட்ட பிரதான வீதியில பெயர் பொறிக்கப்பட்ட கைச்செயின் ஒன்றைக் கண்டெடுத்துள்ளோன். உரிய வர் தொடர்புகொள்ள வேண்டிய முக வரி: கி.வரதராசன் (தவம்), சபா பல்பொருள் விற்பனை நிலையம், அச்சு வேலி. (85998)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

பாதிக்கோழி உட்பட இறைச் சிக்கோழி தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் லேன், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச சந்தையடி, நல்லூர். (86073)

### வீடு தேவை

அரச அலுவலகத்தில் கடமை புரியும் மூன்றுபேர் கொண்ட குடும்பத துக்கு ஓரளவு வசதியுடைய வீடு வாட கைக்கு அல்லது விலைக்குத் தேவை. (நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் இவற்றை அண்மித்த பகுதிகள் விரும்பத்தக்கன) தகுந்த வாடகை வழங்கப்படும். விளம்பர இல. 1251, மே/பா உதயன். (86057)

## கண் பரிசோதனை முகாம்

*இடம்* : புங்குடுதீவு சர்வோதய வளாகம்

*காலம்* : நாளை (1-4-2001) ஞாயிறு காலை 9.00 மணி

கண்பரிசோதனை வழங்குபவர்கள்:

**எரிக்கணேஷ் ஸ்தாபனத்தினர்**

அமரர் சு.ஸ்ரீபாஸ்கரன் ஞாபகார்த்தமாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் இக் கண்பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது.

Eric Ganesh

DENTAL & OPTICIANS
564, 566, HOSPITAL ROAD,
JAFFNA.

(C/15989) T.P. 021-2486

## ஸ்ரார் கல்வி நிலையம்

சுன்னாகம்

**A/L 2003 புதிய கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பம்:**

இன்று (2001-03-31) சனி பிற்பகல் 3.00 மணி

| | | |
|---|---|---|
| Acc<br>Mr.வின்சன் | Eco<br>Mr.மோகன் | Com<br>Mr.முரளி |
| Tamil<br>Mr.பாலா | Logic<br>Mr.R.P.சர்மா | H/c<br>Mr.சோதி |
| Drama<br>Mr.ரமேஸ் | H/I<br>Mr.சந்திரன் | Chirist<br>Miss றெஜினா |

English:-Mr.விஜயபாஸ்கர்

***Note :-*** ஆரம்பத்திலிருந்து போதிக்கப்படும்.
(தனிப்பட அனுமதிகள் உண்டு.)

(86075) - நிர்வாகி

## நெஞ்சம் மறக்குமா.....?



பெற்ற தாய் மடியில் 1942 - 06 - 09

உற்ற தாய் அடியில் 1996 - 03 - 25

## அமரர் முருகேசு பாலசிங்கம்

(சந்தம்புளியடி, காரைநகர்)

திதி 2001-03-31

ஐந்து ஆண்டுகள் ஒடி மறைந்தாலும்- எங்கள்
அகங்களில் வாழும் தெய்வமானீர்கள்!
எந்தப் பணிகளை எங்கு செய்தாலும்
எங்களுக்கு நீங்கள் துணையாயிருக்கின்றீர்கள்!
நித்தமும் உங்கள் நினைவில் வாழ்கின்றோம்
நிந்தன் அன்பைச் சுமந்து வாழ்கின்றோம்!
சித்தம் பணிந்து தாயை வேண்டுகின்றோம்
சீர்கழலில் சேர்ந்து வாழுங்கள்.....!

*நெஞ்சம் கமக்கும் நினைவுகளில்.....*
**திருமதி யோகமலர் பாலசிங்கம்** (மனைவி),
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,**
**மைத்துனர்கள்.**

*120/4, திருவள்ளுவர் சாலை,*
*அரசடி வீதி, கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/15981)

### விற்பனைக்கு

22G தரமான சில்வர் தகடுகள் 8'x4', 8'x3' (எட்டு அடி நீளம், அக லம் நாலு அடி, மூன்று அடி) எம்மி டம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பா ணம். ரெலிபோன் இல. 2052. (85776)

வெற்று சோடாப் போத்தல்கள், பலகைப் பெட்டிகள், வீட்டுத்தள பாடங்கள விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 303, K.K.S வீதி, யாழ்ப்பா ணம். (86043)

**EUROSTAR 950 Alfa Gold 500** சனல், **Benjamin- BEC-2000 LMB- LMBF** டிஸ் அன்ரனா- (8 அடி 10அடி) விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. ராஜ்குமார், சந்தை வீதி, ஆவரங் கால். **T.P** 212565. (86050)

புதிய தள்ளு நாற்காலி (Wheel Chair) உடன் விற்பனைக்கு உண்டு. செ.பாலசிங்கம், ஞானவைரவர் கோயி லடி, உரும்பிராய் கிழக்கு. (86069)

### கோழிக்குஞ்சுகள்

7 நாள் முதல் 11 நாள் வரையி லான பல இனக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே.வீ. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (86036)

### புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக் குண்டு. விலை 80/- சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்தவர்கள் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: வை.சிவகு மார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது கிளின்சொட் அருகில், பஸ் நிலையம்,யாழ்ப்பாணம். (86021)

### தவறிவிட்டது

சாவகச்சேரி சிவன் கோயில் வதியைச் சேர்ந்த சாவகச்சேரி ப.நோ.கூ.ச. ஊழியர் முருகேசபிள்ளை பரமநாதன் என்பவரது தேசிய அ. அ. (இல.420792093v) நெல்லியடிக்கும் கப்புதூவுக்கும் இடையில் கடந்த 15-03-2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின் எப்பகுதியிலா வது ஒப்படைத்து உதவவும். சன்மா னம் வழங்கப்படும். (C/15970)

F 18, இரணைக்குடிசை, காங் கேசன்துறையைச் சேர்ந்த இரா மலிங்கம் கதிர்காமநாதன் என்ப வருடைய தேசிய அ.அட்டை (இல.582130396v) சீமெந்துக் கூட்டுத்தாபன அ.அட்டை, விசேட அ.அட்டை, பொலீஸ் அறிக்கைக் கொப்பி என்பன 25-03-2001 அன்று யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கு மிடையில் தவறிவிட்டன. கண்டெடுத தவர்கள் பாலா மில்,T.C லேன், மானிப் பாயில் ஒப்படைத்துதவவும்.(86044)

### MATHS / ENGLISH

**O/L** புதிய, பழைய பாடத்திட்ட மூலம் கணிதம், ஆங்கிலத்தில், **CREDIT, DISTINCTION,** பெறுபேற டையவும், ஆண்டு 6-10 வரை கற்பிக கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில பின்புறம்) திருநெல்வேலி. (85917)

### NEW MATHS

ஆண்டு 6 இல் இருந்து O/L வரை புதிய கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் 40 மணித்தியாலஙக ளில் Distinction பெறுபேறடையக கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (86076)

## தேவை

கணனி அச்சமைப்பாளர் (M.S Word, Page Maker), ஒ(f)ப்செட் மெசின் இயக்குநர், புத்தகம் கட்டுநர் தேவை. நேரில் வரவும்.

**கங்கை ஒ(F)ப்செட் பிறின்டேர்ஸ்**
*நாவலர் றோட்,*
*(பிறவுண் வீதிக்கு அருகில்)*
*யாழ்ப்பாணம்.*

(86081)

# வாழ்த்துக்கள்



இன்று (31.03.2001) லண்டன், அஸ்குறெவ்ற் கலை அரங்கில் **பரதநாட்டிய அரங்கேற்றம்** காணும் தென்லண்டன் தமிழ்ப் பாடசாலை ஆசிரியை **திருமதி மாலதி ஜெயநாயகம்** அவர்களின் மாணவியும் ***கேசாவில் பிள்ளையார் கோயிலடி*** காலஞ்சென்றவர்களான **சுப்பிரமணியம் - நவமணியின்** பேர்த்தியும், **பேரின்பநாதன் - யோகமலர்** தம்பதிகளின் ஏகபுத்திரியுமான

**செல்வி ரூபினி பேரின்பநாதன்**

அவர்கள் இக்கலையில் மேலும் சிறப்புற சின்னப்பெரியப்பா, பெரியம்மா, சின்னமாமா, சின்னஅத்தை, பெரியஅத்தான், பெரியஅக்கா, **சின்னஅத்தான்,** சின்னஅக்கா, சேந்தன் அண்ணா, தங்கை கார்த்திகா, மைத்துனி நவலட்சனா ஆகியோர் இதய பூர்வமாக வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்:*
**திருமதி ருக்மணிதேவி பாலகிருஷ்ணன்.**
***"மணிரங்கம்"***
கேசாவில் பிள்ளையார் கோயிலடி, வண்ணார்பண்ணை.

(86070)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 - 03 - 1949

உதிர்வு 01 - 03 - 2001

## அல்பிரட் பெனடிற் (யோகம்)

தாயும் தாரமும் தங்கநிகர் புத்திரரும்
தரணியிலே தலைநிமிர்ந்து பெருவாழ்வு வாழவென்று
தேசங் கடந்து சென்று திரவியம் தேடி நின்று
நேசமாய் உறவுகளைத் தேடி வர நாள் குறித்தாய்!
ஆண்டோர் பத்து பொறுமையுடன் நின்றுழைத்தும்
ஆசையுடன் தாய் நிலத்தில் கால் பதிக்க மறந்ததென்ன?
காலனவன் கொடுவினையோ பதைபதைத்து வாடுகின்றோம்
காலமெல்லாம் உன் நினைவால் உருகியிங்கு வாடுகின்றோம்.

01.03.2001 இல் சுவிஸில் காலமான எமது குடும்ப விளக்கின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமது துயரத்தில் பங்குகொண்டு கண்ணீர் அஞ்சலியைப் பிரசுரித்த யாழ். மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினருக்கும், குருமட மாணவர்களுக்கும் மற்றும் அருட்தந்தையர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் எமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், எமது தந்தையின இறுதிக்கிரியைகளை நேரில் நின்று நடத்திய உறவினர்கள், உடன் பிறப்புக்களுக்கும், எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*
**மனைவி,**
**பிள்ளைகள்.**

*இல.115, சென். பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(86064)

# இந்த வார இராசி பலன்

## 01-04-2001 - 07-04-2001

### மகாதேவா ஜோதிடம்

பங்குனி உத்தரம் சிறந்த புண்ணிய தெய்வகடாட்ச நாளாகும். 06-04-2001 வெள்ளிக்கிழமை காலை 9 மணி 44 நிமிஷத்திலிருந்து தொடங்கி 07-04-2001 சனி காலை 8 24 வரையும் உத்தர நாளாகும். (பஃ பூம நேரப்படி)

| | | | |
|---|---|---|---|
| சூ ▲ வெ புத | சனி | வி | ராகு சந் |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| கே | செ | | |

**மாற்றம்:**

***01-04-2001 இல் திருவாதிரை, சந்திரன் மிதுனம் இராசியில் நிற்கும்.***

சமாதானப் பேச்சு தாமதமானாலும் ஒரு திருப்புமுனை வரும். உலகம் முழு அழுத்தங்களை இருபகுதியினருக்கும் கொடுக்கும், யுத்த பயம், இடப்பெயர்வு மக்களின் வேண்டுதல் சகலும், விட்டுக்கொடுத்து ஒரு நியாயமான முடிவை நாடி நகர்வுகள் ஏற்பட இடம் உண்டு. இந்தியா, நோர்வே முழுப்பங்கும் மேற்கு நாடுகள், கிழக்கு நாடுகள் அரைப்பங்கும், பிரிட்டன் புதிய அழுத்தமும் கொடுக்கும். கல்விமான்கள், சமயப் பெரியோர்கள், உலகத் தலைவர்கள் அழுத்தங்களைக் கொடுத்து எமது குழந்தைகளைக் காப்பாற்றவேண்டிய நேரம் வந்துவிட்டதைச் சிந்தியுங்கள் என ஒரு குரல் கேட்கும் மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளுக்கு பொருளாதார அழுத்தம் கொடுக்கும். இந்தியாவில் அரசியல் கருத்து வேற்றுமைகள் அதிகரித்தாலும் பொருளாதாரத்திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். இயற்கை அழிவுகள் சர்வசாதாரணம். செயற்கை அழிவுகள் திட்டமிடப்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

நல்ல உள்ளங்கள் வாழ்க்கைச் சூறாவளியில், சிக்கிச் சில தவறுகள் செய்வதில்லையா? அடிக்கடி தொழில் ஸ்தானத்தில் கோபித்தபடி இருக்காதீர்கள். எல்லோரையும் திருத்த ஆலோசனை சொல்லி வீண் குறை கேட்பீர்கள். பொதுச் சேவையில் காலநேரம் செலவழியும். வீட்டில் எதிர்ப்பாலாருடன் ஒத்துப்போவீர்கள். காணி பூமியில் ஆக்கமான பணி சிறப்பைத்தரும். அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் ஆதரவு தருவார்கள்; தலை நோ, நரம்புச் சோர்வு வயிற்றுவருத்தங்கள், உஷ்ண பீடைகளால் வருந்த இடமுண்டு. தரகுத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.

## இடபம்

விலை மதிப்பில்லாத எத்தனையோ உயிர்களை அழிக்கும் இந்த யுத்தத்திற்கு முடிவு ஏற்படாதா? என ஏங்கும் உள்ளங்கள் அநேகம். முடிவு வராமலா போகும்? மிக விரைவில் ஒரு முடிவு வரும். எனவே நாம் அமைதியாக இருப்போம் என எண்ணியபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை வரும். எதிர்ப்பாலாரைகனம் செய்து வாருங்கள். மறைமுக எதிரிகள் இருப்பதை அறிவீர்கள். வாய்வு அழுத்தம், சலவருத்தம், தொண்டை நோ, நாரி உளைவு என்பன இருக்கும், ரீ.வி.த்துறை கொம்பியூட்டர்த்துறை, வியாபாரத்துறை வங்கித்துறை, ஹோட்டல் துறை, செய்தித்துறை, குருத்துறை] போன்ற துறையைச் சேர்ந்தவர்கள். அதிக நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.

## மிதுனம்

எங்கே போகிறீர்கள்? ஆத்மா அழிவதில்லை எனத் தத்துவம் பேசுகிறார்கள் உண்மையா என ஆராய்ச்சி செய்யப் போகிறீர்களா? எத்தனையோ பேர்கள் ஆராய்ச்சி செய்து முடிவைக் காணாமலே போய்விட்டார்கள். இதைப் பெரிதாக எண்ணியபடி இருக்காமல் கடமையைச் செய்து திறமையான முடிவுகளைப் பெறுங்கள். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்பட நேரிடலாம் போட்டிகள் சர்வசாதாரணம். வாதப் பிடிப்பு, வாய்வுத் தொல்லைகள்மலச்சிக்கல்கள், கைகால்வலி அல்லது உரசல் காயங்கள், தலைவலி, களைப்பு என்பன வரும். அரசியல்துறை. தோட்டத் துறை. மருந்துத் துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரம் போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

## கடகம்

நல்ல உள்ளமுடையவர்களும் தவறுகள் விடுகிறார்கள். மனிதப்பிறவியே குறை குற்றம் நிறைந்ததுதான் என்பதை உணருவீர்கள். குற்றம் குறை, வீண்பழி சொல்பவர்களை விலக்கி நடக்க முயலுங்கள். பாசமென்பது போலித்தனமாக இந்த உலகம் பார்ப்பதுவும் போலிதான். வாழ்த்துவதும், தூற்றுவதும் வாழ்வில் சகஜம். இடமாற்ற யோசனையுர இடமுண்டு. வாய்வு அழுத்தம், சளி, கைகால் உளைவு, தோல் வருத்தம் என்பன வர இடமுண்டு. சலம், இரத்தத்தை சோதித்துப் பாருங்கள். புதிய பொறுப்பு, ஆலய தரிசனம் என்பன கொடுக்கும். புதிய பொருளொன்று உங்களை நாடும். செய்தித்துறை, அரசியல் துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை, ஹோட்டல் துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.

## சிங்கம்

அறிவுக்கு, தகுதிக்கு, உண்மைக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும். அதனால் தான் உண்மையான நன்மைகள் நாட்டுக்கு, மக்களுக்கு கிடைக்கும். அதை நீங்கள் நிச்சயம் செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் பல ஆக்கங்கள் உருவாகும். பொதுத் தொண்டு புகழ் தரும். புதிய திட்டம், முயற்சியால் ஆக்கங்களை உருவாக்குவீர்கள். வாய்வுப் பிடிப்பு, கைகால் உளைவு, அதிக வேலைப் பொறுப்பால் களைப்பு, கோபம் என்பன வரும். தூரதேசச் செய்திகளால் நன்மையான மாற்றங்கள் ஏற்படலாம். நீதித்துறை, பாதுகாப்புத் துறை, ஆசிரியத்துறை, நிர்வாகத் துறை, மருந்துத் துறை போன்ற துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்.

## கன்னி

கடமைகளைத் திறமையுடன் செய்ய வேண்டும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் புதிய பல திட்டங்கள் உருவாகும். புதிய நட்பு, குடும்பத்தில் கலகலப்பு என்பன ஏற்படும். சந்தோசமான காலம் சிரித்துச் சிரித்து காரியங்களைச் செய்துவருவீர்கள். புதிதாக தூரத்திலிருந்து செய்திகள் வரும். சளி, வயிற்றுநோ, இருமித்தாக்கம், வாய்வு அழுத்தம் என்பன வந்து போகும். நாரி உளைவுக்கு எண்ணெய் தேய்ப்பீர்கள். எதிர்ப்பாலாரை அனுசரித்துப் போவீர்கள். இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். ரீ. வித்துறை. கொம்பியூட்டர் துறை, அச்சுத்துறை, செய்தித்துறை, நிர்வாகத்துறை. குருத்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கிடைக்கும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து வாருங்கள். கிறிஸ்தவ அன்பர்கள் மாதா, அந்தோனியார் கோயிலுக்கு விளக்கெரிக்க எண்ணெய் கொடுத்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

## துலாம்

மனித முயற்சி தெய்வ நிபந்திக்குட்பட்டது எனவே தொழில் ஸ்தானத்தில் கடமையுடன் வழி நடத்துங்கள். குடும்பச் செலவு, உளத்தாக்கம் சமநிலைப்படுத்துங்கள். பாசத்தால் பொருள் செலவுகள்கட்டுமீறும். நிதானப்படுத்துங்கள். தொழில் ஸ்தானத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இறைவணக்கம் எமது வாழ்வில் சம நிலையைத் தரும். செயற்பாடுகளில் குறை நிறை வரத்தான் செய்யும். அதற்காகக் கலங்கக் கூடாது. ஆக்கத்திற்காக போராடி தோல்வி கண்டாலும் அதனால் தீமை இல்லை அடுத்து வெற்றி காண்பீர்கள். பொதுத்தொண்டு பலசெய்து சிலவற்றில் குறைகளைச் சிலர் சொல்ல மனம் கலங்குவீர்கள். கலங்காமல் வழிபாடு செய்யுங்கள். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும் சிறுவிபத்து, வயிற்று நோ, நாரிப்பிடிப்பு, தோல்வருத்தம் சலவருத்தம் வரலாம், சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, எண்ணெய், பிரயாணத் துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

## விருச்சிகம்

உறுதியான செயற்பாடு, உண்மை ஆக்கம் கொண்டவர்கள் நீங்கள். கண்டிப்பான உங்கள் அழுத்தங்களால் இச்சமுதாயத்தில் பலர் நன்மை அடைந்து வருகிறார்கள். உங்கள் கோபம் பிறரை ஆக்கப்படுத்த என்பதைப் பலர் அறியமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய செய்திகள் வரும். புதிய நட்புக் கிடைக்கும். உண்மை அன்புக்காக ஏங்குவீர்கள் தூரத்துச் செய்திகள் வரலாம். மனக்கருத்தொன்று அபவிவிருந்து வந்து மனவேதனை தரும். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாருடன் நிதானமாகப் பேசுங்கள். இருமித்தாக்கம், முக்கு, தொண்டைநோ, உஷ்ண பீடைகள், சலவருத்தம், நரம்புப் பலவீனம், சல அடைப்பு, கால் வருத்தம், என்பன தொல்லை தரலாம்; தேசிக்காய் நீர் அருந்துங்கள். அடிக்கடி காற்று வெளிகளில் உலாவி வாருங்கள். உடல் இலேசாகும். மனப்பாரம் குறையும். ஆலயவாசலில் அமைதியை காணப்போய் வாருங்கள், போக்குவரத்துப் பகுதி, மருந்துப்பகுதி, கொம்பியூட்டர், செய்தித்துறை, குருத்துறை, கோயில்துறை, தொழில் நுட்பம், பாதுகாப்புத்துறை, போன்றதுறையினர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

## தனுசு

இந்த உலகம் அற்புதமானது. உலகத்தில் பல தவறுகளைச் சிலர் அறியாமையால் செய்து வருகின்றார்கள். எல்லோரும் எனது குழந்தைகள் தான். பலரை அணைப்பதுவும், சிலரை அடிப்பதுவும் இறைவன் விளையாட்டாகும். அந்த நிலைக்கு மனிதன் தன்னை ஆக்கிக்கொண்டால் மனிதனும் தெய்வமாகலாம். தொழில்ஸ்தானத்தில் குறை குற்றம் காணாதீர்கள். சகோதரங்களுடன் வாக்குக் கலகம் ஏற்படும். தந்தை வழியினர் வீண்பழி சுமத்துவார்கள். வாகனச் செலவுகள் வர இடமுண்டு. பிரயாண யோசனை அல்லது தூரதேசச் செய்திகளால் மன வேதனை வர இடம் உண்டு. தெய்வ வழிபாட்டைச் செய்து வரவும். வயிற்றில் வருத்தம், குடல்வருத்தம், மூலச்சூடு, உஷ்ண பீடைகள், நாரி நோ, சிறு அடிகாயங்கள், என்பன வரும். இடமாற்ற யோசனைகளைத் தவிர்க்கவும். கோயில் துறை, தோட்டத் துறை, செய்தித்துறை, தபால்துறை, ரீ. வி கொம்பியூட்டர் துறை, வியாபாரத் துறைத்தொடர்பானவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி

## மகரம்

சிலர் பிள்ளைகளின் பெயரைச் சொல்லி அரிசிவாங்கினார்கள். சிலர் நல்லவர்களின் பெயரைச் சொல்லி தரகு வாங்குகிறார்கள். தொழில் ஸ்தானத்தில் மந்த நிலை தலைதூக்கும் மேலதிகாரி சீறிச்சீறி விழுவார். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் வரலாம், தலையிடி, தலைவருத்தகம், பித்தமயக்கம், நரம்புப்பிடிப்பு, உரசல் காயம், வாய்வுத்தொல்லை என்பன ஏற்பட இடம் உண்டு. தூரதேசச் செய்திகள் வரும். அடிக்கடி இடமாற்ற யோசனைகள் வரலாம். நண்பர்களை நம்ப முடியாத நிலை வர இடம் உண்டு. போக்குவரத்துறை, இசைத்துறை, நகைத்துறை, ஹோட்டல்துறை, கொம்பியூட்டர்துறை, வங்கித் துறை போன்ற துறையைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன். வெள்ளி.

## கும்பம்

கடவுளைக் காட்டுவீர்களா எனக்கேட்பவர் பலர் கடவுள்களின் பெயரைச் சொல்லிக் காசு கேட்பவர்கள் சிலர் நம்பிக்கையுடன் இறைநாமந்தை செபித்துவந்தால் காலம் சென்றாலும், வயது போனாலும் இறை அருள் கிடைக்காமல் விடாது. எனவே தொழில் ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்பட்டு நற்பலனை அடைய முயலுங்கள் பழமையை அடிக்கடிபேசிப் பெருமை அடைவீர்கள். எதிர்ப்பாலார் நன்மை சொல்ல மாட்டார்கள். டாம்பீகச் செலவு. வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும்; கைகால் வீக்கம், இடுப்புவலி, பயப்பாடு, சமியாக்குணம், மறதி என்பனவரும். கடுமையான சொற்களைப் பிறர்மீது பிரயோகித்துவிட்டு மனம்வருந்துவீர்கள். சட்டத்துறை, அரசியல்துறை, நகைத்துறை, ஆசிரியத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்

★ அதிர்ஷ்டநாள்:— வியாழன்.

## மீனம்

உறுதியான செயற்பாடுகள் எப்பொழுதும் வெற்றியைத் தான் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் எதிரிகளின் தொல்லைகள் வேதனையைக்கொடுக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள் எதையும் எடுத்தெறிந்து பேசுவீர்கள். குடும்பத்தினருடன் வாக்குவாதப்படுவீர்கள். வீடு, வாகனயோகம் நிறைந்த பலன்கள் கொடுக்கும். தூரத்துச் செய்திகள் மன உற்சாகத்தைக் கொடுக்கும். பித்தவருத்தங்கள், சளித்தொல்லை, இரத்த அழுத்தம், அஜீரணம் என்பன கொடுக்கும். குடும்பத்தினருடன் அன்பாக இருப்பீர்கள் ஓடியாடித்திரிந்து நன்மைகள் செய்வீர்கள். ஹோட்டல்துறை, இசைத்துறை, செய்தித்துறை, கொம்பியூட்டர்துறை, தபால்பகுதி வியபாரத்துறை மருந்துத்துறை, போக்குவரத்துத் துறை, போன்றதுறையினர்கள் அதிக நன்மைகளை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்: —வியாழன்.


உ

தொண்டமனாறு

**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய**

**வருடாந்த சங்காபிஷேக தினம்**

நாளை (01 - 04 - 2001) ஞாயிற்றுக்கிழமை வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட சமய ஆத்மீக உரை இடம்பெறும்.

விடயம்:- 'நாலாயிரம் கண்படைத்திலனே'

சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். (பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்)

தலைவர்:- திரு. வீ. தெய்வேந்திர ஐயர் அவர்கள்

நேரம்:- பகல் உற்சவத்துக்குப் பின்

- செயலாளர்

முக்கிய குறிப்பு:

சேவாச்சிரம நூல்கள் மிகவும்குறைந்த விலையில் கிடைக்கும் இடம்:-

மைலன் வெதுப்பகம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வீதி, பருத்தித்துறை.

(சி/15987)

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய
மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர்
திரு. P. தர்மநாயகம் அவர்களின்
அருமைத் தாயார்

## திருமதி பிலிப் செல்லம்மா (செல்லம் ஆச்சி)

அவர்கள் 25-3-2001 இல் காலமானார்.

அவரது இழப்பால் நாம் கவலை அடைந்துள்ளோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— செல்வம் குடும்பம்

கந்தரோடை,
சுன்னாகம்.

(86091)


# தொகுதிப் பங்கீடு விடயத்தில் தி.மு.க. கூட்டணிக்குள் இழுபறி

சென்னை, மார்ச் 31

தமிழகத்தில் சட்ட மன்றத் தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் தொகுதிப் பங்கீடு குறித்து இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டணியின் முக்கிய கட்சியான ம. தி. மு. க. தனக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளது. தமது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 21 தொகுதிகளில் 18 தொகுதிகளே தமது விருப்பப்படி வழங்கப்பட்டுள்ளதாகவும்—

ஏனைய மூன்று தொகுதிகளும் தி.மு.கவின் விருப்பப்படியே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்—

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ம. தி. மு. க. விரும்பும் தொகுதிகளை ஒதுக்குவதாக தமிழக முதல்வர் மு கருணாநிதி உறுதி அளித்ததை அடுத்தே 21 தொகுதிகளை ஏற்றுக்கொள்ள நாம் முன்வந்தோம். ஆனால், தற்போது 18 தொகுதிகளே எமது விருப்பப்படி ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் கருத்துத் தெரிவித்த மு. கருணாநிதி —

18 தொகுதிகளே ம. தி. மு. க. விருப்பப்படி ஒதுக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், கூட்டணிக் கட்சி என்னும் போது வெற்றி பெறக் கூடிய தொகுதிகளை மட்டும் கேட்கக் கூடாது. ஏனைய கட்சிகளின் துணையுடன் மற்றைய தொகுதிகளிலும் வெற்றி பெற முயற்சிக்க வேண்டும்— என்றார்'

இதேவேளை—

நாங்கள் கேட்ட படி 43 தொகுதிகளையும் தி. மு. க. ஒதுக்கியிருந்தால் அல்லது குறைந்தது 30 தொகுதிகளையாவது ஒதுக்கி இருந்தால் ஒதுக்கப்படும் தொகுதிகளை ஏற்றிருப்போம்.

ஆனால், மிகக் குறைந்த தொகுதிகளையே தி. மு. க. எமக்கு ஒதுக்கி உள்ளது. அதனாலேயே நாம் விரும்பும் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்று கோருகிறோம். முதல்வர் மு. கருணாநிதி முன்னர் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். என்றும் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்—

தி. மு. க. கூட்டணியில் இருந்து தேசிய ஜனதாதள் கட்சி வெளியேறி உள்ளது எதிர்வரும் தேர்தலில் தனித்து நின்று போட்டியிடப் போவதாக அது அறிவித்துள்ளது.

ஏற்கனவே வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான தமிழக ராஜீவ் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து வெளியேறியது. அதனைத் தொடர்ந்து ஜனதாதள் கட்சியும் வெளியேறி இருப்பது தி. மு. க கூட்டணிக்குப் பலத்த இழப்பு என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(ம—10)

# ஆயுதபேர ஊழல் குறித்து சி. பி. ஐ. விசாரணை ஆரம்பம்

புதுடில்லி, மார்ச் 31

'தெகல்கார்' செய்தி நிறுவனம் வெளியிட்ட ஆயுத பேர ஊழல் குறித்து இந்திய அரசின் மத்திய புலனாய்வுத் துறை விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

'தெகல்கார்' வெளியிட்ட ஒளிநாடாக்கள் போதிய ஆதாரங்களை அளிப்பதால், சம்பந்தப்பட்டோர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய முடியும் இவ்வாறு, அரசின் சிறப்புச் சட்டத்தரணி தெரிவித்திருந்தார். இதனையடுத்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. இளையப்பு கிருபாகரசூரியன்

ஊடகவியலாளரும், சமய — சமூக சேவையாளருமாகிய
திரு. இளையப்பு கிருபாகரசூரியன்

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகவும், வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் நியமிக்கப்பெற்றதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— மாணிக்கம் குடும்பத்தினர்.

14, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(86098)



# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது இடமாற்றத்தைப் பெற்றுத்தருவதற்குப் பெரும் உதவி புரிந்த வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார அமைச்சர்

கௌரவ
## கே. என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்

துரித கதியில் எமது இடமாற்றத்தைப் பெற்றுத் தருவதற்கு சகல வழிகளிலும் உதவிய ஈ. பி. டி. பி. அமைப்பின் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர்

## திரு. மதனராஜா
அவர்களுக்கும்

மற்றும் ஈ. பி. டி. பி. அமைப்பின் ஏனைய பிரமுகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள்.

(86094)



## யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால்
## காங்கேசன்துறை/பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து
## யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குப் பொருள்களை
## ஏற்றிச் (காவி) செல்வதற்கான

# கேள்வி கோரல்-2001

பின்வரும் இடங்களுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால்/உணவு ஆணையாளரினால்/கூட்டுத்தாபனங்களினால்/அரச சார்பற்ற நிறுவனங்களினால்/தனியாரினால் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பப்படும் பொருள்களை எடுத்துச்செல்வதற்கான கேள்வி கோரப்படுகிறது.

இக்கேள்வி விண்ணப்பப்பத்திரத்தினை மீளளிக்கப்படாத பணமாக ரூபா 100-00 ஐச் செலுத்தி 02-04-2001ஆம் திகதியிலிருந்து, 10-04-2001ஆம் திகதிவரை பெற்று மேற்படி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் 20-04-2001 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ இடும்படி கேட்டுக் கொள்கின்றோம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''காங்கேசன்துறை / பருத்தித்துறை இலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. லொறிக்குரிய கேள்வி கோரல்

| இடத்திலிருந்து | இடம்வரை | | கூலி |
|---|---|---|---|
| காங்கேசன் துறைமுகம் | காங்கேசன்துறை களஞ்சியம் | | ………………… |
| காங்கேசன்துறை துறைமுகம் | யாழ்ப்பாணம் | '' | ………………… |
| | நாவற்குழி | '' | ………………… |
| | கொக்குவில் | '' | ………………… |
| | சங்கானை | '' | ………………… |
| | தொல்புரம் | '' | ………………… |
| | கோண்டாவில் | '' | ………………… |
| | ஊர்காவற்றுறை | '' | ………………… |
| | குருநகர் | '' | ………………… |
| | மானிப்பாய் | '' | ………………… |
| | புலோலி | '' | ………………… |
| பருத்தித்துறை துறைமுகம் | பருத்தித்துறை | '' | ………………… |
| பருத்தித்துறை துறைமுகம் | யாழ்ப்பாணம் | '' | ………………… |
| | நாவற்குழி | '' | ………………… |
| | கொக்குவில் | '' | ………………… |
| | சங்கானை | '' | ………………… |
| | தொல்புரம் | '' | ………………… |
| | கோண்டாவில் | '' | ………………… |
| | நெல்லியடி | '' | ………………… |
| | ஊர்காவற்றுறை | '' | ………………… |
| | குருநகர் | '' | ………………… |
| | மானிப்பாய் | '' | ………………… |
| | புலோலி | '' | ………………… |

2. நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர் எம்மால் கேள்விப் பத்திரத்தில் தரப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற வரும்போது பின்வருவனவற்றைக் கொண்டுவர வேண்டும்.
   அ. வாகன உரிமைப் பதிவுச் சான்றிதழ் அல்லது இவை சம்பந்தமான ஏற்கக்கூடிய ஆவணங்கள். எனினும் இவை பற்றிய முடிவு அரச அதிபரினால் எடுக்கப்படும்.
   ஆ. நடப்பு வருடத்துக்கான வாகன வரிப்பத்திரம்.
   இ. செல்லுபடியான காப்புறுதிப் பத்திரம்.
3. கேள்வியில் தெரிவு செய்யப்பட்டவர் அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும்.
4. கேள்விக்காரர் வைப்புப் பணமாக 10 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் ஆயின் இதற்கான தொகையை வங்கி மூலம் உத்தரவாதமளித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் மூலம் உறுதிப்படுத்தித் தரல் வேண்டும்.
5. கேள்வி கோருபவர் சொந்தமாகக் குறைந்தது 150 லொறிகளைக்கொண்டிருக்க வேண்டும் அல்லது இச்சேவைக்கு லொறி வழங்க முடியுமென வேறு தனிப்பட்ட பார ஊர்தி உரிமையாளரிடம் சம்மதத்துக்கான சத்தியக்கடுதாசியினைப் பெற்று, தம்மால் 150 லொறிகளை வழங்கமுடியும் என அரசஅதிபர்திருப்தியடையும் வண்ணம் நிரூபிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களாயின் அதற்கான சான்றிதழை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபார்சுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி கோருபவர் லொறிகள் தேவை என செயலகம் கோரும் போது நாளொன்றுக்கு 60 லொறிகளுக்குக் குறையாது வழங்கத் தயாராக இருக்க வேண்டும். லொறிகள் வழங்கத் தவறும் பட்சத்தில், லொறி வழங்காமையால் அரசுக்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு ஏற்படும் நட்டத்தைச்செலுத்த வேண்டும். இவ்வாறான நட்டத்தொகை கேள்விக்காரரால் செலுத்தப்படும் வைப்புப் பணத்திலிருந்து அறவிடப்படும். அத்துடன் லொறிகள் வழங்கத் தவறும் பட்சத்தில் கேள்விக்காரருடன் உள்ள ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும்.

க. சண்முகநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி/15996)

# கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

அன்பான விநாயகர் அடியார்களே!

## ஆன்மீக இதய நெருடல்கள்

எமது ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 05.04.2001இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14.04.2001 புதுவருடப் பிறப்பன்று தேர், தீர்த்தத்துடன் முடிவடைவது நீங்கள் அறிந்ததே. இக்காலப் பகுதியை நினைக்கவே இதயங்கள் கனக்கின்றன. இதனை நினைவுகூர்ந்து எமது விநாயகனை விரைவில் மீண்டும் காண, அருள் வேண்டிக் கிடைக்க, சமாதானம் நிலவ அனைவரும் ஒன்றாகப் பிரார்த்திப்போமாக!

கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் அருள் சொரிய வேண்டி,

(86107) **பரிபாலன சபை.**



# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



பேரன்புடையீர்!

**விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 23.03.2001 வெள்ளிக்கிழமை இரவு சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயார்**

## சோமசுந்தரக்குருக்கள்
## குப்புலெட்ச்சுமி அம்மா

**அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.**

01.04.2001 - ஞாயிறு காலை 11 மணிக்கு - *தசாகம்*
02.04.2001 - திங்கள் காலை 10 மணிக்கு - *ஏகோதிஷ்டம் மாசியம்*
03.04.2001 - செவ்வாய் காலை 11 மணி - *சபிண்டிகரணம்*
04.04.2001 - புதன் நண்பகல் 11 மணி - *கிருஹயக்ஞம்*
*(பிராம்மண சமாராதனை)*
05.04.2001 - வியாழன் நண்பகல் 12 மணிக்கு - *மதியபோசனம்* நடைபெறும்.

**மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*நிரந்தர முகவரி:*
*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

இங்ஙனம்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி:
*இல.19, இரண்டாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(86100)


## மட்டுவிலில் இருவர் மிதிவெடியில் கால் இழப்பு

தென்மராட்சி,மார்ச்31

மட்டுவில் வடக்கு மானாவளைப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் இருவர் தமது கால்களை இழந்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள தமது வீட்டில் இருந்து உடைமைகளை எடுத்து வருவதற்காக உதவியாளர் ஒருவருடன் சென்ற மாணிக்கம் சின்னராசா (வயது 41) என்பவர் இடது காலையும் -

உதவியாளராகச் சென்ற இராசையா ஸ்ரீரங்கராசா (வயது 37) வலது காலையும் -

இழந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-3-117)

## மரக்கிளை விழுந்து மிதிவெடி வெடித்தது!

யாழ்ப்பாணம்,மார்ச்31

மரத்தின் அடிப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி மீது மரக்கிளை விழுந்து வெடித்ததில் அருகில் நின்ற குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆவரங்கால், புத்தூரைச் சேர்ந்த மயில்வாகனம் ரமணன் (வயது 24) என்ற குடும்பஸ்தரே காயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

விறகுத் தேவைக்காக வாதரவத்தைப் பகுதியிலுள்ள மரம் ஒன்றை வெட்டிய போதே அந்த மரக்கிளை மிதிவெடியின் மேல் வீழ்ந்து மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-6-9)

## உதைபந்தாட்டம்

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கிடையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற இருக்கும் அரைஇறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ இன்று - கொக்குவில் பொற்பதி எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ்.

☆ நாளை - ஊரெழு றோயல் எதிர் குருநகர் சென்.றோக்ஸ்.

(உ-3)

## உரை

யாழ்ப்பாணம்,மார்ச்31

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் இடம்பெறும் வாராந்த திவ்வியப் பிரபந்த உரைத் தொடரில் இன்று பி.ப. 4.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவராஜ சர்மா உரையாற்றுவார். (உ-3)


# பழைய பித்தளை கொள்வனவு

சகலவிதமான பழைய பித்தளைப் பொருள்களும் அதி உயர்நத விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

**கொள்வனவு விலை கிலோவுக்கு ரூபா 65**

எவ்வளவு பித்தளையானாலும் கொள்வனவு செய்யப்படும்.

*விவரங்களுக்கு:*

## செல்வா ஹாட்வெயர்ஸ்

120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:2873 (C/15909)



## யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் இணைந்து.....

# தவறவிடாதீர்கள்..........!

யுத்தம் ஓயவிருக்கும் ? இவ்வேளையில்
போர் நிறுத்தம் ? வரவிருக்கும் இவ்வேளையில்
நாம் ? ?

# 'இனி ஒரு விதி செய்வோம்'

காலம்:- பி.ப.3.30 (புதிய நேரம்) இன்று (31.03.2001) சனிக்கிழமை
இடம் :- கைலாசபதி கலையரங்கம்.
அன்பளிப்பு:- 50/=, 30/=

*குறிப்பு:* 17.03.2001க்குரிய அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டவர்களும் அனுமதிக்கப்படுவர்.

*நுழைவாயிலிலும் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

(86108) **விவசாய பீட மாணவர் ஒன்றியம்.**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரம் பராசக்தி

காளிகோயிலடி, சங்கானையைச் சேர்ந்த திருமதி சுந்தரம் பராசக்தி கடந்த (29.03.2001)வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காளிகோயிலடி,*
*சங்கானை,* (86105)

தகவல்:
சு.வேலுப்பிள்ளை (மகன்)

## திருமதி ஏரோணி மேரி றோஸ் (றோசலீன்)

திருமதி ஏரோணி மேரி றோஸ்(றோசலீன்) நேற்று (30.03.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் ஏரோணியின்(முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி நல்லையா அருளானந்தத்தின் அன்பு மகளும், அ.யேசுதாஸன் (இ.மி.ச.கொழும்பு,முன்னாள் அலுவலர்), அருட்செல்வி லூட்ஸ் அருளானந்தம் (பிரான்ஸிஸ்கன் சபை, மட்டக்களப்பு), அ.அன்ரன் ஞானப்பிரகாசம்(இ.மி.ச. மத்திய மின்னிலையம், சுன்னாகம்), சி.யேசுதாசன் (இ.மி.ச. முன்னாள் யாழ்.களஞ்சியப் பொறுப்பாளர்) ஆகியோரின் அனபுச் சகோதரியும், திருமதி கறலைன் யேசுதாசன் (இ.மி.ச.முன்னாள் அலுவலர், கொழும்பு), திருமதி கிருபா அன்ரன் ஆகியோரின் மைத்துனியும், திருமதி புஷ்பராணி தனராஜ்(இந்தியன் வங்கி, கொழும்பு), பிறிற்றோ விநோதன், வேர்ஜினியா விநோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(31.03.2001) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு 41, பழைய பூங்கா வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருநது புனித மரியன்னை பேராலயச் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அருள்யோவாசா"*
*41, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (86103)

தகவல்:
அ.அன்ரன் ஞானப்பிரகாசம்
(சகோதரன்)

## திருமதி கமலினி யோகலிங்கம்

திருமதி கமலினி யோகலிங்கம் நேற்று (30-03-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகலிங்கத்தின் (டோகா) அன்பு மனைவியும் விடத்தற்பளை மிருசுவில் ச.தில்லைநடேசன் - பத்மாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கமலேஸ்வரன், கமலரூபன்(லண்டன்), கமலகுமார், கலையரசி, அகலிகை, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலிங்கம் (சுவிஸ்), சோதிலிங்கம், அமிர்தலிங்கம் (டோகா), சிவபாக்கியலட்சுமியம்மா, மோகனா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-03-2001) சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

***நிரந்தர முகவரி:***
*விடத்தற்பளை,*
*மிருசுவில்.*
***தற்போதைய முகவரி:-***
*தாவடி பத்திரகாளி கோயிலடி,*
*தாவடி.* (86104)

தகவல்:
ச.தில்லைநடேசன்
(தகப்பன்)

## வைத்திலிங்கம் சீவரெட்ணம்

நாச்சிமார் கோயிலடியை சேர்ந்த வைத்திலிங்கம் சீவரெட்ணம் 27-03-2001 செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியாரும் தனலட்சுமி(வவாச்சி - ஜேர்மனி), சத்தியமூர்த்தி (மூர்த்தி - டென்மார்க்), ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசு (மோகன்- ஜேர்மனி), லிங்கா (உஷா - டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரகுராம், ரஜீவன், நிரோஜன், பானுஷா, சங்கீத், செந்தூரன் அகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-03-2001) சனிக்கிழமை டென்மார்க்கில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறறுக்கொள்ளவும்.

*நாச்சிமார்கோயிலடி*
*யாழ்ப்பாணம்.* (86106)

தகவல்:
த.அருளானந்தம்
(அருள்)


# திருமண வாழ்த்துக்கள்

இன்று (31.03.2001) சனிக்கிழமை காலை 6.00 மணி
அளவில் வரும் சுபமுகூர்த்த வேளையில் இல்லற வாழ்வில்
இணையும் புதுமணத் தம்பதிகளான

*மணமகன்*
*திருநிறை செல்வன்*
**க.வோல்டர் ஏஞ்சலோ (பவா)**
*(பேள் நியூ பசன் ஹவுஸ், சங்கானை.)*

*மணமகள்*
*திருநிறை செல்வி*
**வோ.பிரதீபா**
*(பிரதேச செயலகம், சங்கானை)*

ஆகிய இருவரும்
ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி வாழ்வில்
பதினாறு பேறுகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி
வாழ்க! வாழ்க!!
வாழியவே!!!
என்று மனமார வாழ்த்துகின்றோம்!

வடலியூர். ((86099)

**அன்பு நண்பர்கள்.**

கடற்படைத் தாக்குதலைக் கண்டித்து

# சென்னையில் இலங்கைத் தூதரகம் முன் தமிழக மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தி வரும் தாககுதல்களைக் கண்டித்து பல நூற்றுக்கணக்கான தமிழக மீனவர்கள் நேற்று சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'தமிழகக் கடற்படையே எமது மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கு', 'கச்சதீவை மீட்போம்' போன்ற கோஷங்களை இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இலங்கைத் தூதரக அதிகாரியிடம் தமிழக - மீனவர்களினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

கடந்த ஐந்துவருட காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் 41 தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 70 பேர் காயப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது கடந்த புதன்கிழமை பிற்பகல் 5.30 மணிமுதல் மோட்டார் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர் என்றும் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-3)

## பத்திரிகையாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதகத் திருச்செல்வம் பின்னர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட காலத்தில் - ஆரம்பத்தில் - தாம் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

"எனது விடுதலைக்காக எனது சக பத்திரிகையாளர்கள் காட்டிய அக்கறையைப் பார்க்கும்போது பத்திரிகையாளராக இருப்பதையிட்டு பெருமிதப்படுகிறேன்" என்றும் அவர் சொன்னார்.

தனது விடுதலைக்காகக் குரல் கொடுத்த சர்வதேச ஊடகவியலாளர் சங்கங்கள், வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் பிராந்தியப் பத்திரிகையாளர் சங்கங்கள், பத்திரிகை நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார். (உ-3)

மன்னாரில் இடம்பெற்ற

# பாலியல் வல்லுறவுச் சம்பவத்தை கண்டித்து கிழக்கில் மறியற்போர்

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து நேற்று கிழக்கு பல்கலைக்கழக சமூகத்தினால் மறியற் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 1மணி தொடக்கம் 2 மணி வரை கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரதான வாசலை மூடி நின்று பல்கலைக்கழக சமூகத்தினர் மறியலில் ஈடுபட்டனர்.

மறியற்போரில் ஈடுபட்டோர் பாலியல் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டிக்கும் வகையிலான சுலோகங்களை கோஷித்தவாறும், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் காணப்பட்டனர். (உ-5)

# வல்லுறவு புரிந்த படையினரை இடம் மாற்றுவதற்கு திட்டமாம்!

## தப்ப வைக்கும் முயற்சி எனச் சந்தேகம்

மன்னாரில் இரு தமிழ் பெண்கள் மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள கடற்படையினர் மற்றும் பொலீஸாரை இடம்மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து நடைபெற்றுவரும் விசாரணைகளில் இருந்து இவர்களைத் தப்பச் செய்யும் நோக்குடனேயே இந்த இடம்மாற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கடற்படையினர் 7 பேரும் நாசகார ஒழிப்பு பொலீஸார் 15 பேரும் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம்-

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரு பெண்களிடமிருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட பிரதிநிதி எஸ்.ரவீந்திரன் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

பாதிக்கப்பட்ட இந்தப் பெண்கள் மீதான வைத்தியப் பரிசோதனையை வைத்திய அதிகாரி சோமசுந்தரம் நடத்தினார்.

பரிசோதனையின் பின்னர் இது தொடர்பான மருத்துவ அறிக்கையை அவர் நேற்று மன்னார் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்தார். (உ-5)

## கமலநாதன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலக நிர்வாக கடமை சம்பந்தமாக இத்தாக்குதல் நடைபெறறதாக ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

அது உண்மையாயின், உடனடியாக உச்ச நடவடிக்கை எடுக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

காடைத் தனங்களை அனுமதிப்பது எதிர்காலத்தில் அரச நிர்வாக இயந்திரங்கள் உரிய முறையில் செயறபடுவதற்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதைத் தங்கள் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம். - என்றுள்ளது. (உ-3-133)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை தொடங்குவதற்கு முன்னதாக - உடனடியாக - நடைமுறைக்கு வரும்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பொருள்களில் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்றவை அடங்கும்.

அந்தப் பகுதிக்கு அனுப்புவதற்கு தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ள பொருள்கள் எதுவும் அங்கு அனுப்பப்படமாட்டாது - என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)

## தீவுப்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரவு நேரம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் பேடித்தனமான செயல். இச்சம்பவத்தில் ஈடுபட்ட அரசு சார்புள்ள குழு, இத்தகைய சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபடுவது சகஜமாகிவிட்டது.

வன்முறையைக் கைவிட்டு விட்டோம் என்று கூறிக்கொண்டு இத்தகைய செயல்களில் ஈடுபடுவதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மக்கள் சேவையில் ஈடுபடும் அரச ஊழியர்களை தத்தம் கடமைகளைச் செய்யவிடாது தலையிட்டு தாக்கி, ஊழியர்கள் மத்தியில் பெரும் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தாது தடுக்க வேண்டியது அரசின் கடமை.

குற்றவாளிகளைத் தேடிப் பிடித்து, அரசியல் செல்வாக்குக்கு இடம் அளிக்காது, தண்டிக்க வேண்டியதும், ஊழியர்களை சுதந்திரமாக இயங்கக் கூடிய வகையில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டியதும் அரசின் பொறுப்பாகும் - இப்படி அதில தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# தமிழர் ஆசிரியர் சங்[...] மாநாடு நேற்று ஆரம்ப[...]

திருகோணமலை, மார்ச்31

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 27ஆவது வருடாந்த மாநாடு நேற்று திருகோணமலையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை, மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் செ.அமிர்தலிங்கம், ஜேர்மன் பிரட்றிக் ஈபேட் மன்றத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டிற்மர் நைக்செல் ஆகியோர் சங்கத்தின் தலைவர் சி.குமரகுருதாசன், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் கு[...] ரெத்தினம் மற்றும் மாநாட்டில் பற்றிய ஆசிரியர்கள் சகிதம் [...]றுக் காலை திருகோணமலை[...]துக் கல்லூரியில் இருந்து, [...] நடைபெற்ற புனித மரியாள் [...]ரிக்கு - 'தமிழினியம்' வாத்[...] குழுவினரின் வழிநடத்தலுடன் [...] வலமாகக் கூட்டிச் செல்லப்பட[...]

நேற்றுக் காலை நடை[...] மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு[...] ஆயிரத்துக்கும் அதிகமானோர் [...] பற்றினர்.

மாநாட்டின் இறுதிநாளான [...] புதிய வருட உத்தியோகத்[...] விவரம் அறிவிக்கப்படும்; தீ[...]களும் நிறைவேற்றப்படும்.

(உ[...]

## தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர மேயர் என்.ரவிராஜ் திரைநீக்கம் செய்துவைப்பார்.

இதனைத் தொடர்ந்து மேயரின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்க கட்சிகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர்.

தந்தை செல்வா நினைவு தேசிய அவை, தந்தை செல்வா அறங்காவற் குழு போன்றவற்றின் பிரதிநிதிகளாலும் தந்தை செல்வா பிறந்ததின நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை யாழ்பாணக் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் தந்தை செல்வாவின் 103ஆம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்த ஆராதனை சுண்டுக்குளி யாழ். பரியோவான் ஆலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் இந்த நன்றி செலுத்தும் வழிபாட்டு ஆராதனையில் இறை செய்தியை வண.பிதா ஏ.ஐ.பேர்ணாட் அடிகளார் வழங்கவுள்ளார்.(க-5-10)

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொட[...]

தென்பகுதியில் தாக்குதல்கள்[...]யல் தலைவர்களைப் படுகொ[...] செய்தல் என்பவற்றை நிறுத்[...]குப் புலிகள் இயக்கம் இணக்க[...]வித்திருப்பதாக அவர் சொ[...]

யாழ்ப்பாணம் கண்டி வீ[...] பிரதான பாதையைத் திறப்[...] இடமளிக்க வேண்டும் என்ப[...]சின் பிரதான கோரிக்கையாக[...] பதாகவும் அதற்குப் புலிகள் இ[...]யிருப்பதாகவும் அவர் சொ[...]

புரிந்துணர்வு உடன்படி[...] இரு சாராருக்கும் இடையில் [...] நிறுத்தம் தொடர்பான இண[...] டொன்றை ஏற்படுத்தும் என[...] பிக்கை தெரிவிக்கப்பட்டது.

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொட[...]

நோர்வேயின் சமரச முயற்[...] இந்தியா தடுப்பதாக இலங்கை[...] கங்களில் வெளியான செ[...] ஆதாரமற்றவை என்று இ[...] தூதரக அதிகாரி ஒருவர் [...]துள்ளார்.

இலங்கை அரசின் ஆ[...] செயற்படுவதாகக் கருதப்படும்[...] செய்தி ஊடகம் ஒன்றே இச்[...]யினை முதலில் வெளியிட்[...]

நோர்வேயின் சமரச மு[...]ளில் இந்தியா அதிருப்தி[...] தலைப்பில் அந்தக் கணனி [...]தினால் இந்தச் செய்தி வெ[...] பட்டிருந்தது.

இச்செய்தி, நேற்றைய [...]லும் முன்பக்கத் தலைப்புச்[...]யாகப் பிரசுரிக்கப்பட்டிருந்[...]

இந்தச் செய்திக்கான உ[...] ஆதாரங்கள் எதுவும் தெரிவி[...]வில்லை என்றும் இந்தியத்[...] அதிகாரிகள் சுட்டிக்காட்டி[...]


**பதவி வெற்றிடங்கள் - உடன் விண்ணப்பிக்கவும்**

கீழ்க்காணும் பதவிகளுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கார் சாரதி
2. ஓட்டோ சாரதி
3. பத்திரிகை விநியோகஸ்தர்

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்களும் கொழும்பில் பணியாற்ற விரும்புவோரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை உடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.

விளம்பர இல: 1247,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/15899)



**SUBRA (14)**
சித்தன்கேணி
2001 A/L
பொது வினாவும்
பொது உளச்சார்பும்
துரித மீட்டல் வினாவிடை.
செவ்வாய் 6-7
எமது வழமையான ஆசிரியர்
கணக்கீடு 2001 A/L
D.SAM
Mon., Wed., Fri. 2- 3.30
2001 A/L DAY
இணைந்த கணிதம்
A.பத்மநாதன்
Mon., Fri.6 - 8
புவியியல்
2001 Mon., Tue., Thu.,Fri
6-7 (Paper)
2002 Mon., Tue., Sat.,Sun
3-4
2003 Mon., Tue., Sat.,Sun
4-5
திரு. S. ஐங்கரன்
(C/15915)



O/L
DAY CLASS
ஏப்ரல் 02இல்
ஆரம்பம்
பெயர் பதிவுகள் ஏற்கப்படுகின்றன.
(C/15939)



யாழ். கல்வி நிலையம்
ஆறுகால்மடம்.
புவியியல்
நில அளவையியல்
04.04.2001 புதன் 5.00
ஆசிரியர்: S.ஐங்கரன்
(C/15916)



விளைவ[...]
சுன்னாகம்[...]
A/L 200[...]
கணக்கீடு :K.S. மோ[...]
பொருளியல் : நவதாச[...]
வணிகக்கல்வி :V. நந்தீ[...]
தமிழ் :V.M. ஐங்[...]
அளவையியல் :சுரேஸ்
இந்து நாகரிகம், இந்து சமயம் :பாலகிஷ[...]
நாடக அரங்கியல் :சத்திய[...]
ஆங்கிலம் :விஜயப[...]


## மரண அறிவித்தல்

**ஆழ்வாப்பிள்ளை நல்லதம்பி -நெல்லி[...]**

**(பாலசிங்கம்)**

நெல்லியடி - கரவெட்டியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை நல்ல[...] (வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற கணக்கா[...] வடமராட்சி அலுவலக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்[...] கணக்காளர்), நேற்று (30-03-2001) வெள்ளிக்கிழமை அதிகாலை [...]மானார்.

அன்னார் அமுதம்(அம்மியம்மா) அவர்களின் அன்புக் கணவரா[...]

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நே[...] (30-03-2001) வெள்ளிக்கிழமை இடம்பெற்று பூதவுடல் மாலை 5 ம[...]யளவில் கரவெட்டி சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்[...]

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை[...] ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சுப்பிரமணியம் ஜெயராசா[...]
(பேரமகன்)

நெல்லியடி,
கரவெட்டி. (86109)


**BIT மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்**

முதன் முறையாக கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகவல் தொழில் நுட்ப பட்டப் படிப்பிற்கான அரை ஆண்டிறுதிப்பரீட்சைக்கு இன்று தோற்றும் மாணவர்கள் அனைவருக்கும் IBMS கணனி நிறுவனம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

IBMS
No.701,K.K.S Road,
Jaffna.
Tele : 021- 3165

Email:ibmsjaffna@yahoo.com
ibmsjaffna@ultavista.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2001 இல் [...] வெளியீடப் பெற்றது.